
# செங்கதிர்

இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை



50/=

கலை-இலக்கிய-பண்பாட்டுப் பல்சுவைத் திங்களிதழ்

2008

1

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
2008



# யுனைட்ரட் புத்தகசாலை

பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், காகிதங்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் தினசரி, வார, மாத வெளியீடுகள்.

இல: 53 திருகோணமலை வீதி
மட்டக்களப்பு.
தொலைபேசி: 065 2222103
பெக்ஸ்: 065 2225434

# LASAN INN

Rooms: A/C Non A/C Double & Triple with all modern Facilities
Food: Western, Eastern & Chinese,
Vehicle Facilities.

89/1, TRINCO ROAD,
BATTICALOA.
Tel: 065 2227174
065 4922162
Mobile: 077 9679755


கொழும்பு தமிழ்ச் சங்கம்
050 70/=
செங்கதிர்
Boulpazi
SLPR 2008

"இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை"


செங்கதிர்

1

தை 2008 (தி.வ ஆண்டு 2039)

ஆசிரியர்: செங்கதிரோன்



தொடர்பு முகவரி:
இல.19, மேல்மாடித்தெரு
மட்டக்களப்பு
தொலைபேசி:
065 2223950
077 3597045
மின்னஞ்சல்:
senkathirgopal@gmail.com


ஆக்கங்களுக்கு
ஆக்கியோரே பொறுப்பு.

## ஆசிரியர் பக்கம்

ஈழத்து இலக்கியச் சிற்றிதழ்கள் வரிசையில் "செங்கதிர்" ஒரு புதிய பிரசவம்.

இதன் வீச்சு ஈழத்து இலக்கிய உலகெங்கும் வியாபிக்கும்.

கடல்கடந்தும் இதன் கதிர்கள் காயும்.

திறந்த பொருளாதாரமும் உலகமய மாக்கமும் எம் பண்பாட்டுத் தனித்துவங்களையும் விழுமியங்களையும் பாதித்து வருகின்றன. வேறு பல நன்மைகளை விளைத்திருந்த போதிலும் நவீன தகவல் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியும் எமது பண்பாட்டு விழுமியங்களைப் பாதிப்புறச் செய்வதில் தன்பங்கையும் செலுத்தத் தவறவில்லை. பொருளீட்டுவதும் குறுக்கு வழியில் போலிப் புகழீட்டுவதுமே மனிதப் பிறவியின் முழுநோக்கமும் என்பதே போக்காகி விட்டது. மனிதம் மதிக்கப்படுவதாயில்லை. மனித மனங்களைச்செழுமைப் படுத்தும் வல்லமை கலை, இலக்கியங்களுக்கு உண்டு என்பதில் "செங்கதிர்" நம்பிக்கை கொண்டிருக்கின்றது.

மேற்கு நாடுகளிலே மேற்கிளம்புகின்ற நவீன கலை

47222

இலக்கியக் கோட்பாடுகளை அப்படியே நெட்டுருப் பண்ணி எம்மவர்களிடையே திணிக்கும் "புத்திஜீவித்தனத்தை" "செங்கதிர்" நிராகரிக்கின்றது. அவற்றில் எமக்குப் பொருத்தப்பாடுடைய நல்லவற்றை நாடி அல்லவற்றை அகற்றும் அறிவு பூர்வமான அணுகுமுறையையே "செங்கதிர்" ஆதரிக்கின்றது. வேரின்றி விருட்சம் இல்லை. மரபின் வேர்களில் காலூன்றி நின்று புதுமையை நோக்குவதே "செங்கதிர்"இன் செல்நெறியாக இருக்கும்.

கலை இலக்கியச் செயற்பாடுகளினூடாக மனிதம் மலரவும் மானுடம் ஓங்கவும் "செங்கதிர்" உழைக்கும்.

உதவுங்கள். உற்சாகப்படுத்துங்கள். ஊக்கியாய் இருங்கள்.

-செங்கதிரோன்-

**"செங்கதிர்" கட்டண விபரம்: (அஞ்சல் செலவு உட்பட)**

| | இலங்கை | இந்தியா | வெளிநாடு |
|---|---|---|---|
| அரையாண்டுக்கட்டணம் | 500/- | 250/- | US$ 10 |
| ஓராண்டுக் கட்டணம் | 1000/- | 500/- | US$ 20 |
| ஆயுள் கட்டணம் | 10,000/- | 5000/- | US$ 100 |
| புரவலர் கட்டணம் | 25,000/- | 12,500/- | US$ 250 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப்படும். புரவலர்களுக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப்படுவதுடன் "செங்கதிர்" எதிர்காலத்தில் வெளியிடவுள்ள எல்லா நூல்களும் இலவசமாக வழங்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | | | | |
|---|---|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | முழு | 5000 | 1500 | US$ 50 |
| | அரை | 3000 | 1000 | US$ 30 |
| முன்அட்டை உட்புறம் | முழு | 3000 | 1000 | US$ 30 |
| | அரை | 2000 | 750 | US$ 20 |
| பின்அட்டை உட்புறம் | முழு | 2000 | 750 | US$ 20 |
| | அரை | 1500 | 500 | US$ 15 |

**அன்பளிப்பு**


அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் (உதவும் கரங்கள்) தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி: மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு
கணக்கு இல: 113100138588996 (நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு



# அதிதிப்பக்கம்

"செங்கதிர்" இதழின் இம்மாத அதிதி (முதல் அதிதி) கொழும்புப் பல்கலைக்கழக கல்விப் பீடாதிபதி பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களாவர்.



23-12-2007 அன்று அகவை அறுபத்திமூன்றைப் பூர்த்தி செய்துள்ள சோ.சந்திரசேகரன் அவர்கள் நாடறிந்த கல்விமான்.

படித்துப் பட்டங்கள் பெற்றுவிட்டால் பதவிகள் கிடைத்து விட்டால் மற்றவர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் கொண்டு மக்களிடமிருந்து தங்களை அந்நியப்படுத்திக்கொண்டு தாங்களே வலிந்து வரித்துக் கொண்ட "அறிவுலகில்" சஞ்சரித்துத் தங்கள் "அறிவு ஜீவித்தனத்தை" வெளிப்படுத்தும் "அறிவுஜீவி"களால் சமூகத்துக்கு எந்தப் பயனும் கிடையாது. பெரும்பாலான படித்தவர்கள் இப்படித்தான் இருக்கிறார்கள். இத்தகையோரின் புலமை வெறும் புகழுக்காகவும் புளுகுக்காகவுமே. அப்படியில்லாமல் ஆயிரத்தில் ஒருவராகத் திகழ்பவரே திரு.சோ.சந்திரசேகரன் அவர்கள். பேராசிரியர் என்ற எந்தவிதமான "பந்தா"வுமின்றி சாதாரண மக்களுடன் அவர்கள் எந்த வயதுடையவர்களாயிருந்தாலும் சரி முதுகிலே தட்டி அன்பாகவும் தோழமையுடனும் அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு வழிகாட்டியாகவும் பழகும் அவரது பண்பு படித்தவர்கள் பலரிடம் இல்லாதது. பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுவதுபோல அறிவும் அன்பும் ஒன்று சேர்ந்த குணாம்சமே அவருடையது. இதுவே அவரது ஆளுமையின் சிறப்பு. மேலும், தான் கற்றதை - அனுபவித்ததை - தனது சிந்தனைகளை சாதாரண மக்களுடன் எளிமையான எவர்க்கும் புரிகின்ற மொழிநடையில் ஊடகங்கள் வாயிலாகப் பகிர்ந்து கொள்ளுவதன் மூலம் பாடசாலை மாணவர்கள் - ஆசிரியர்கள் - பல்கலைக்கழக மாணவர்கள் - விரிவுரையாளர்கள் - பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்கள் - வாசகர்கள் இப்படி எல்லாத் தரத்தினரோடும் ஓர் உன்னதமான உறவை வளர்த்து வருபவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள்.

அவரை "செங்கதிர்" இதழின் இம்மாத அதிதியாக அறியத் தருவதில் "செங்கதிர்" பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறது.

-ஆசிரியர்-

# கல்வியும் நவீனமயமாக்கமும்

- பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் கல்விச் செயற்பாட்டின் பங்களிப்புக்குப் பெரும் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வந்துள்ளது. இதனால் கல்வி, அபிவிருத்திக்கு வேறு வழிகளில் செய்யும் பங்களிப்பு என்னும் விடயம் அதிகமாக ஆராயப்படவில்லை. அபிவிருத்தி என்பது பொருளாதார வளர்ச்சியை மட்டுமன்றி பல சமூக மேம்பாடுகளையும் உள்ளடக்கும் ஒரு எண்ணக்கருவாகும். வாழ்க்கைத்தரம், நவீனமான உளப்பாங்குகள், விழுமியங்கள், நம்பிக்கைகள், அடிப்படையான மனித தேவைகள் நிறைவு செய்யப்படல் போன்ற அம்சங்கள் அபிவிருத்தியின் சமூக பரிமாணங்களாகும். இவ்வம்சங்களில் மேம்பாடு காணப்படாவிடில், ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் விளைவுகளில் தடைகளும் பாதிப்புகளும் ஏற்படும். இந்நிலையில் கல்வி, இம்முக்கிய அம்சங்களில் ஏற்படுத்தும் பாதிப்பைக் கருத்திற் கொள்ளுமிடத்து, கல்விக்கும் அபிவிருத்திக்குமிடையில் உள்ள தொடர்பு பற்றிய ஒரு விரிவான பார்வையைப் பெற முடியும்.

கல்வியை அபிவிருத்திக்குப் பயன்படுத்தல் தொடர்பான கொள்கை உருவாக்கமும் திட்டமிடலும், "நவீனமயமாக்க" அணுகுமுறையினைப் பின்பற்றுவதாகக் கூறப்படுகின்றது. இந்நிலையில் நவீனமயமாக்கம் என்னும் சிந்தனையின் உட்பொருள், அதன் பயன்பாடு என்பனபற்றி அறிய வேண்டியுள்ளது. ஆயினும் இவ்வெண்ணக்கரு பற்றிய கருத்து வேறுபாடுகள் அதிகம். ஏனெனில், இதன் உட்பொருளைச் சரியாக வரையறுத்துக் கூற முடியாது (imprecise). அத்துடன் நவீனமயம் பல்வகைப் பரிமாணங்களைக் கொண்ட ஒரு எண்ணக்கரு. மேலும், நவீனமயம் பற்றிய சிந்தனையும் செயற்பாடும் மேலைநாட்டுச் சார்புடையது என்ற கருத்தும் உள்ளது. இதனால் பல கருத்து வேறுபாடுகள் எழுந்தாலும், நவீனமயமாக்கம் பற்றி விரிவான முறையில் பல ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

நவீனமயமாக்கம் பற்றிய ஆய்வுகள் யாவும் இன்க்லெஸ் (Inkeles) என்ற அறிஞரின் "நவீன மனிதன்" பற்றிய வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவாகும். அவருடைய வரையறையின்படி "நவீனமனிதன்" என்பவன்.

- புதிய அனுபவங்களைப் பெற விரும்பும் திறந்த மனமுடையவன்
- சமூக மாற்றத்தை எதிர்நோக்கும் திடசித்தம் கொண்டவன்
- பல்வகையான கருத்துக்களும் உளப்பாங்குகளும் உண்டு என்பதை நன்கு அறிந்தவன்: மற்றவர்கள் சுயமான கருத்துக்களை வெளியிட அனுமதிப்பவன்
- உண்மையான நிகழ்வுகளின் அடிப்படையில் கருத்துக்களை உருவாக்குபவன்
- கடந்த காலத்தை விடுத்து நிகழ்காலம், எதிர்காலம் பற்றிச் சிந்திப்பவன்
- தான் திறமையாகச் செயற்பட வேண்டும் என்ற உணர்வுள்ளவன்
- நீண்ட காலத்திட்டமிடலில் நம்பிக்கை உள்ளவன்



- தொழில்நுட்பத்திறனை விரும்புபவன்
- கல்வியைப் பெரிதும் மதிப்பவன்
- தொழில் உற்பத்திக்குப் பின்னணியான காரண-காரியத்தொடர்பை உணர்ந்தவன்

இவ்வறிஞரின் கருத்தின்படி நவீன பிரஜைகளின்றி நவீன அபிவிருத்தி ஏற்பட முடியாது. மேலும், மக்கள் நவீன பிரஜைகளாக உருவாக வேண்டுமாயின் அவர்கள் நவீன நிறுவனங்களின் செயற்பாட்டில் பங்கேற்க வேண்டும். இந்நிறுவனங்களில் கல்வியும் (பாடசாலைகள்) கைத்தொழிலும் (தொழிற்சாலைகள்) பிரதானமானவை என்பது அவர்கள் கருத்து.

நவீன மயமாக்கத்தை ஏற்படுத்துவதில் பாடசாலைகள் முக்கிய பங்களிப்பைச் செய்கின்றன என்பதற்கு ஆய்வுச் சான்றுகள் உண்டு. உயர்தரமான கல்வித் தேர்ச்சியைப் பெறுபவர்கள், மேலும் உயர்கல்வியையும் உயர் தொழில் நாட்டங்களையும் கொண்டவர்களாக இருப்பர். பாரம்பரியமான நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் அதிகம் விரும்புவதில்லை. புதிய அனுபவங்களைப் பெறும் திறந்த மனம் அவர்களுக்கு உண்டு. குடும்பத் தொடர்புகளும் குறைவாகவே இருக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன.

நவீனமயமாக்கத்தில் கல்வியின் பங்களிப்பு பற்றிய ஆரம்ப கால ஆய்வொன்றின்படி (1964) மத்தியகிழக்கு நாடுகளில் இடைநிலைக்கல்வி பயின்றவர்கள், மாறிவரும் சூழ்நிலைகளுக்கிணங்கத் தம்மை மாற்றிக் கொள்ளும் திறமை படைத்தவர்கள். மெக்சிக்கோ, பிரேசில் முதலிய நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி கல்விக்கும் நவீனமயமாக்கத்துக்குமிடையே நேரடியான தொடர்பு உண்டு. நவீன மயமாக்கத்தின் மற்றொரு குறிகாட்டியாக அரசியல் ஆர்வமும் விழிப்புணர்வும் கொள்ளப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்கா, ஜெர்மனி, இத்தாலி, மெக்சிக்கோ முதலிய நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி, உயர்தரமான கல்வித்தேர்ச்சியின் காரணமாக அரசியல் ஆர்வமும் அதிகரிக்கின்றது. ஆர்ஜெண்டீனா, சில்லி, இஸ்ரவேல், இந்தியா ஆகிய நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி கல்வித்தேர்ச்சிக்கும் தனியாளின் நவீனமயமாக்கத்துக்குமிடையே தொடர்புண்டு. பொதுத் தொடர்பு சாதனங்களைவிடப் பாடசாலைகளே நவீனமயமாக்கத்தில் முக்கிய பங்கு கொள்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறைந்த விருத்தியுடைய 49 நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வொன்றின்படி பாடசாலைகள், மேற்கத்தைய மயத்தைத் தவிர்த்த முறையில் நவீனமயமாக்கும் ஆற்றலுடையவை.

கல்வியுடன் தொடர்புபடுத்தப்படும் நவீன மயமாக்கம் பற்றி எழுப்பப்படும் முக்கிய ஐயங்களுள் ஒன்று பாடசாலைக்கல்வி தவிர்க்க முடியாத வகையில் நவீனமயமாக்கத்தை ஏற்படுத்துகின்றதா என்பதாகும். ஆர்மர் (Armer, 1971) என்பாரின் ஆய்வின்படி, சில நிலைமைகளில் கல்விச் செயற்பாடு நவீனமயமாக்கத்தைவிட பாரம்பரிய கலாசாரத்தையும் பழக்கவழக்கங்களையும் வலியுறுத்துதாய் அமைய முடியும். பாட ஏற்பாட்டின் காரணமாக இத்தகைய விளைவு ஏற்பட முடியும். இஸ்லாமிய சமயப்பாடசாலைகளில் செய்யப்பட்ட ஆய்வுகள் இக்கருத்தை உறுதி செய்தன. வாக்னர் (Wagner, 1985) என்பாரின் ஆய்வின்படி அந்நிய ஆதிக்கத்தைக் கடுமையாக எதிர்த்த மொறொக்கோ,

நைஜீரியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் பாடசாலைகள் இவ்வாறான பாரம்பரிய மயமாக்கப் பணியில் வெற்றி கண்டன.

நவீனமயமாக்கம் பற்றிய ஆராய்ச்சிகள் பெரும்பாலும் மேலைநாட்டுப் பாடசாலைகள் வழங்குகின்ற பயிற்சி, வாழ்க்கைப் பெறுமானங்கள், உளப்பாங்குகளை ஒத்த வினாக்கொத்துக்களின் அடிப்படையிலானவை என்பது இவ்வாய்வுகள் பற்றிய மற்றொரு கண்டனமாகும். மேலும் பாடசாலைக்கல்வி அனைவரையுமன்றி தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே வழங்கப்படுவதால் நவீனமயம் தொடர்பான உளப்பாங்குகளைப் பாடசாலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

இறுதியாக, பாடசாலை - நவீனமயம் பற்றிய ஆய்வுகள் யாவும், நவீன மயமாக்கம் தவிர்க்க முடியாதவகையில் அபிவிருத்திக்கே இட்டுச் செல்லும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் நவீனமயத்தினால் அபிவிருத்திக்கு மாறான எதிர்விளைவுகளும் ஏற்படலாம். ஆய்வாளர்கள் இனங்கண்டுள்ள அத்தகைய சில விளைவுகளாவன:

- வளர்முக நாடுகளிலிருந்து சிறப்புத்தேர்ச்சி பெற்ற மூளைசாலிகளின் வெளியேற்றம்
- நவீனமயமாக்கச் செயற்பாட்டினால் சமூக உறவுகளில் ஏற்படும் பாதிப்பு
- பயனுள்ள பாரம்பரிய சமூக நிறுவனங்களின் சிதைவு
- பொது மக்களின் வாழ்க்கை நிலைமைகளுடன் தொடர்பற்ற நவீனமயமாக்கப்பட்ட கற்றோர் குழாமின் தோற்றம்

கல்வி, எதிர்மறை நவீனமயமாக்கத்தைச் சமூகத்தில் தோற்றுவிக்கும் போது, நாட்டின் சமூக அபிவிருத்தியில் கல்வி எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கருத இடமுண்டு.

## தமிழறிவோம்

மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே! என்ற பழமொழியை நாம் கேட்டிருக்கின்றோம். இப்பழமொழிக்கு உண்மையான அர்த்தம் என்ன?

ஆற்றில் இருக்கும் மணல் திட்டுகளுக்கு "மண்குதிர்" என்று பெயர். நீரோட்டத்தின் சுழற்சிகளுக்கு ஏற்ப அடிக்கடி இது மாறிக்கொண்டிருக்கும். இத்தகைய மணல் திட்டுக்கள் அதாவது மண குதிர்கள் இருப்பதைக்கண்டு சற்று நீர் வற்றிவிட்டது என்று நினைக்கக்கூடாது. மண்குதிர் பகுதியை தவிர்த்து மற்ற இடங்களில் நீர் நல்ல சுழற்சியுடன் வேகமாக ஓடிக் கொண்டே இருக்கும். நீர் பாய்ந்து செல்லக்கூடிய அத்தகைய பகுதிகளில் ஆழமும் மிகுதியாக இருக்கும். இதனை அறியாமல் மண்குதிர்கள் இருப்பதைக் கண்டு ஆற்றில் இறங்கி ஏமாந்தமையால் "மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே" என்ற பழமொழி வழங்கப்பட்டது. மண்குதிரையை அல்ல மண்குதிரை என்பதே சரி.




# கதிர்முகம்

## தமிழர் திருநாள் தைப்பொங்கல்

தற்காலத்தில் சாலிவாகன ஆண்டு, விக்கிரமாதித்திய ஆண்டு என எத்தனையோ தொடர் ஆண்டு முறை பின்பற்றப்பட்டாலும், அவற்றில் எதுவும் தமிழர் வரலாற்றோடு பொருந்தி வரவில்லை. தமிழ் ஆண்டு என்னும் பெயரில் வழக்கில் இருக்கின்ற

ரபவ' முதல் 'அட்சய' வரை உள்ள அறுபது (60) ஆண்டுகளின் பெயர்கள் தமிழ் இல்லை. அவை பற்சக்கர முறையில் இருப்பதால் 60 ஆண்டுகளுக்கு மேல் உள்ள காலத்தைக் கணக்கிடுவதற்கு உதவியாக இல்லை. அதற்கு வழங்கும் கதை அறிவியல், தமிழ்மரபு ஆகியவற்றிற்குப் பொருத்தமாகவும் இல்லை. எனவே தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள் 1921 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியிலே தனித்தமிழ் இயக்கத்தந்தையெனப் போற்றப்படும் மறைமலை அடிகள் (1876 - 1950) தலைமையிலே கூடி ஆராய்ந்தார்கள். அந்த மாநாட்டிலேதான் திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டைப் பின்பற்றுவது என்றும் அதையே தமிழ் ஆண்டு எனக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. திருவள்ளுவர்காலம் கி.மு 31 என்றும் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் தைப்பொங்கல் நாளான தமிழுக்குத் தை முதல் நாள் என்றும் முடிவு செய்து அறிவித்தார்கள். திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை. ஆங்கில ஆண்டுடன் 31 ஐக் கூட்டினால் (2008 + 31 = 2039) வருவது திருவள்ளுவர் ஆண்டு. தமிழ் நாடு அரசு 1971 முதல் இதனை நடைமுறைப்படுத்தி வருகின்றது. தமிழ்ப்புத் தாண்டுத் தொடக்கமே தைப்பொங்கல் ஆகும். அதுவே தமிழர் திருநாளாகும். தை பிறந்திருக்கிறது. வழமைபோல் வழி பிறக்குமென நம்பிக்கைதான் வாழ்க்கை. நம்புவோம்.



# பொங்கலுக்கு வரும் ரெலிவிஷன்

- கவிஞர் செ.குணரத்தினம்



கனகம்மா மச்சாளை
கனநாளாய்க் காணவில்லை.
எனக்கவளைக் காணாமல்
இரணமும் இறங்கவில்லை.

கறிபுளி வாங்கும் சாட்டில்
காலையில் வந்தாளென்றால்
'ரெலிவிஷன்' பார்த்துப்போக
ரெண்டரை மணியைத் தாண்டும்.

குடிவெறியில் புருசன்வந்து
கொம்பிக் கூத்தாடிநின்று
எடுபிகறி சோத்தை யென்றால்
இவளென்ன செய்வாள்? பின்பு

கொடுப்பான் அடிஉதைகள்
கூக்குரல் வைப்பாள் மச்சாள்.
அடிஉதை வாங்கினாலும்
அடுத்தநாள் வந்து நிற்பாள்.

தொலைக்காட்சி நாடகங்கள்
தொடங்கினால் அவளின் கண்கள்
இமைக்காது தேநீர் மட்டும்
இடைக்கிடை என்னைக் கேட்பாள்.

இடையிலே எனதுமாமி
"இடும்பிச்சி" வந்தால்கூட
நடைகட்ட விரும்பிடாமல்
நாடகம் பார்த்திருப்பாள்

மூலை முடுக்குகளில்
முச்சந்தி வீதிகளில்
சாலைகளில் நடக்கின்ற
சம்பவங்கள் சகலதையும்
ஓலையிலே எழுதினாற் போல்
ஒப்புவிப்பதால் இவளை
நாளும் நான் வரவேற்று
நாடகம் பார்க்கவைப்பேன்.

எங்கே இவள் தொலைந்தாள்?
இவள் புருசன் தாறுமாறாய்
மொங்கியதால் செத்தாளோ!
மெய்தான் இவளொருக்கா
இங்கு வந்து போனபோது
என்புருசன் ரி.வி வாங்கி
பொங்கலன்று தருவாரென்று
புகன்றதை நான் மறந்தே போனேன்.




இலை தரித்த கிளிசறியா மரம் நின்ற வீட்டுக் கோடிப்புறத்துப் பக்கம். விளக்குமாறால் குப்பை கூட்டிப் பெருக்கிக்கொண்டு நின்றாள் கோமளா.

அவள் அந்த மரத்துக்குக்கீழே கூட்டும்போது ஈர்க்குக்குக் கிளம்பாமலும் பழுத்தவிலைகள் மண்ணிலே ஒட்டிக்கிடந்தன. அதனால் அவள் ஒரே இடத்தில், ஒரு தடவைக்கு பல தடவைகள், விளக்குமாறு ஈர்க்கால் அந்தப் பழுத்தல் இலைகளை கிளப்பித்தள்ளவும் வேண்டி இருந்தது.

"முற்றத்தில் ஏன் இந்தக் கிழட்டுச் சனிக்கிளுவையை வெட்டி விடாம இன்னும் விட்டு வைச்சிருக்கு?"

என்று அதனால் எரிச்சலுடன் அவள் நினைத்தாள். அவளுக்கு அதற்கான காரணம் ஏதும் தெரியவில்லை அவள் இந்த வீட்டிலே நல்லநாதனின் ஒரே மகன் சங்கரன் என்பவரை திருமணம் முடித்து வாழ வந்திருக்கிறவள். தான் வாழ வந்த இந்த வீட்டிலே - இன்னும் அறிந்துகொள்ள வேண்டி



# உண்மை உறங்குவதில்லை

-நீ.பி.அருளானந்தம்

இருப்பது எவ்வளவோ இங்கேயும் இருக்கும். அவையெல்லாம் காலம் போகப் போகத்தான் மெதுவாக இனி எனக்குத் தெரியவரும் என்று அவள் தன் மனதுக்குள்ளே பிறகு நினைத்துக்கொண்டாள்.

கிளிசறியா மரத்தில் கொண்டைக்கிளாறு குருவிகள் இருந்து கத்திக் கொண்டிருந்தன. அந்த மரத்தின் கீழ்க்கிளை யிலிருந்து பக்கத்துக்கிளைக்கு வழுக்கியது ஒரு பச்சைப் பாம்பு. நிலத்தடியிலே சாட்டையாய்த் துள்ளிவிழுந்த அந்தப் பச்சைப்பாம்பைக் கண்டவுடன் துள்ளிவிழுந்தடித்த படிகை விளக்குமாறோடு முற்றத்துப் பக்கம் ஓடினாள் அவள். பாம்பைக் கண்டு பயப்பிட்டு ஓடிய ஓட்டத்தில் அவளுக்கு உடனே மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

மருமகள் பதறியோடி வருவதைக் கண்டுவிட்டு குசினிக்குப்பின்னால் நின்று கொண்டிருந்த நல்லநாதன் "என்ன பிள்ளை, என்ன என்ன....?" என்று கேட்டுக்கொண்டு உடனே அவள் நின்றிருந்த இடத்துக்கு வந்தார்.

"அங்க அதில ஒரு பாம்பு மாமா பாம்பு" என்று அவள் மாமனாரைப் பார்த்து நடுக்கத்தோடு சொல்லவும் "எங்கயா பாம்பு...?" என்று அவர் மருமகளைப் பார்த்துக் கேட்டுக் கொண்டு அந்தக் கோடிப்பக்கம் பனை ஓலை வேய்ந்த கொட்டிலில் கிடந்த கம்பைக் கையில் எடுத்துக்கொள்ள ஓடிப்போனார்.

"மாமா அது சும்மா ஒரு சின்னப் பச்சைப்பாம்பு மாமா... வேலிப்பக்கம் சுருக்கெண்டு அது ஓடிப்போய்ப் பூந்திட்டுது..."

என்றாள் பிறகு அவள்.

''அதுக்கேன் பிள்ளை உனக்குப் பயம்! நீ வந்து முன்னம் மாதிரிக் கூட்டம்மா... நான் இதில நிண்டு பார்க்கிறன் அதை..." என்றார் அவர்.

கோமளா கிளிசறியா மரத்துக்குக் கீழே போய் நின்று மீண்டும் தான் விட்ட இடத்திலிருந்து விளக்குமாறால் குப்பை கூட்டிப் பெருக்கத் தொடங்கினாள்.

நல்லநாதன் வேலியடியில் நின்ற வேம்பு மரக்கிளையில் ஒரு குச்சு உடைத்துப் பல் தீட்டத் தொடங்கினார். கசப்பு எச்சிலை வேலிப்பக்கம் துப்பி விட்டு கொட்டிலடிக்குப் போக நடை போட்டார்.

''என்ன மாமா இந்தக் கிளுசறியாமரக் கொப்பிலை ஒரு பழைய அரிக்கன் லாம்பு கிடந்து தூங்குது...?''

என்று மாமாவிடம் கேட்டாள் கோமளா. கோமளா எதையும் மனதில் வைத்துக்கொள்ளாது உடனே யாரிடமும் தான் கேட்க நினைப்பதை வெளிப்படையாகக் கேட்டு விடுவாள். அவள் பிறந்த வீட்டிலும் சரி அப்படித்தான் பழக்கப்பட்டவள். இந்த அவளது வெளிப்படையான அவளது பேச்சுச் சுபாவம் புகுந்த இடத்திலும் கூட இங்குள்ளவர் களுக்கு எல்லாம் மனதுக்குப் பிடித்துக் கொண்டதாகவும் இருந்தது.

மருமகள் அப்படிக் கேட்டதும் நல்லநாதனுக்கு மாவிட்டபுரம் கோயில் திருவிழா அதனால் ஞாபகம் வந்தது. அந்தக் கோயிலடியில் திருவிழா மூட்டம், புகையிலை வியாபாரம் செய்த - அந்தக்கிழவன் வைத்திருந்த அரிக்கன் லாம்பின் ஞாபகமும் அவருக்கு வந்தது.

அந்தக் கிழவன் தனக்குப் பக்கத்தில் வைத்திருந்த ஹரிக்கன் லாம்பின் மௌன ஒளி, இப்போதும் தன் கண்ணில் பட்டது போல உடனே அவருக்கு இருந்தது.

அந்த லாம்பு நிதானமாக எரிவது போல, ஒரு நினைவு அவருக்கு அப்போது எழுந்தது. அந்தத் "தீ" நாக்கின் நுனியில் இருந்து எழும்பும் கரும் புகையில் அவர் சிறிது நேரம் மூச்சுத் திணறுகிறமாதிரியாய் இருந்தார். மனசெல்லாம் அந்தப் "புகை" வந்து அடைத்துக் கொள்வது மாதிரியாய் வர, அவரும் அந்தப் பழைய லாம்பைப் பார்த்தார்.

மாமாவும் அந்த லாம்பைப் பார்க்கிறார் எனத் தானும் கண்டு விட்டு, கோமளா இன்னும் அவருக்குச் சொன்னாள்.

"எல்லாம் முற்றுப்புள்ளியள் விழுந்த மாதிரி உந்த அரிக்கன் லாம்பு இப்ப ஓட்டையாய்ப் போட்டுது... அடிப்பக்கமெல்லாம் பிஞ்சு பிளந்து போய் கறள் கறளாக் கீழே அதால நிலத்தில கொட்டுப்படுது... லாம்பின்ர சிம்மினியும் உடைஞ்சு துண்டு துண்டாய் உள்ள கிடக்கு.. கம்பி கழண்டு ஒரு பக்கம் பிண்டும் இருக்கு... ஒரு கம்பை எடுத்து அந்த லாம்புப் பிடிக்கை விட்டு. உந்த மரத்தால உதக்கழட்டிவிட்டா என்ன மாமா? செய்யலாமோ அப்படி...? ஏனெண்டாக் கண்டியளோ உந்தக் கறள் கீழே விழுந்து கால்வழிய பிறகு ஏறிச்செண்டா அது பெரிய நஞ்சு... பேந்து ஏற்பூசி போட வேணும்..! உந்த விளக்கை இதில மரத்தில ஆர் மாமா அப்பிடிக் கொழுவி விட்டது?

என்று கடைசிக் கேள்வியை மென்று முழுங்கி மெதுவாக மாமனாரிடம் கேட்டாள் கோமளா. என்றாலும் மருமகள் கேட்ட கடைசிக் கேள்வி ஒரு இடித் தீயைப்போல நல்லநாதனுக்கு இருந்தது. இருந்தாலும் தன்னை அப்பொழுது அவர் சமாளித்துக் கொண்டார். மருமகள் அப்படிக் கேட்ட கேள்விகளுக்கு தானும் இப்போது உண்மையைக் கூறிவிட வேண்டும் போல அவருக்கு இருந்தது. உலகநாதன் இந்த வயதுக்கு வந்ததின் பிறகு ''மகாத்மா காந்தியின்'' கொள்ளைகளிலேதான் அதிகம் பிடிப்பு வைத்திருந்தார்.

''காந்தி'' தன் நண்பர் ஒருவரைக்கூட அவர் செய்த தவறை உணரச் செய்து நீதி மன்றத்தில் அதற்காக பிழையை ஒத்துக்கொள்ளுமாறு போதித்-

தவர். அந்த நிகழ்வைத் தான் படித்து அறிந்த ''சத்திய சோதனை'' எனும் அவரது நூலிலிருந்து ''நல்லநாதன்'' இப்போது நினைத்துப் பார்த்தார்.

சரிதான்! அன்று எனக்கு நடந்த அந்தச் சம்பவத்தை இப்போதாவது என் மருமகள் கேட்கும் போது சொல்லி விடுவதுதானே ஞாயம். மருமகள் எங்கள் வீட்டை நம்பி இங்கே வாழ வந்திருப்பவள். பார்க்கப்போனால் அவளிடமும் ஒரு ஒளிவு மறைவு இல்லை. அதனால் எங்கள் வீட்டிலும் அப்படி என்று இல்லாது எல்லா விஷயமும் அவளுக்கும் வெட்ட வெளிச்சமாய் தெரிந்து இருக்க வேண்டும். அதுதானே எங்களுக்கும் இருக்க வேண்டிய ஒரு ஞாயம்.?

என்று தனக்குள் நினைத்துக் கொண்டு, முன்பு நடந்த அந்தச் சம்பவத்தைப் பற்றிய உண்மையை மருமகளிடமும் தான் கூறுவதற்குத் துணிந்தார் அவர்.

“அந்த விளக்குக்குப் பின்னால் பெரிய ஒரு கதை ஒண்டு இருக்குது பிள்ள...!” என்று அவர் அவளுக்கு முதலில் கூறினார்.

கோமளா மாமனாரைப் பார்த்துச் சிரித்தாள்.

அவள் சிரிப்பைப் பார்த்து விட்டு..

“உண்மையா அது பெரிய ஒரு கதை பிள்ள, அதக் கேட்டா நீ இந்த மாமாவையும் வெறுப்பாயோ என்னவோ...?”

என்று நல்லநாதன் சொல்லவும்...

கோமளா நெற்றியைச் சுருக்கினாள்.

“என்ன மாமா! ஏன் நீங்க அப்பிடி எல்லாம் சொல்லுறீங்க?” என்று குரல் மாறிப் போன துயரத்தோடு, அவள் மாமாவைப் பார்த்துக் கேட்டாள்.

''அப்படித்தான் அந்த இளந்தாரி வயசில நானும் ஒரு பிழை விட்டது...''

என்று சொல்லிவிட்டு கிளுசறியா மரக் கிளைகளை ஏறிட்டு ஒருமுறை நோக்கினார் நல்லநாதன். மேலே ஒரு கிளையில் அணில் வால் தட்டிக் கத்திக் கொண்டிருந்தது. தெருவில் ஒற்றை மாட்டு வண்டில் “கட்டக்... கட்டக்” கென்று போகிற சப்தம்! அவர் கேட்டுக் கொண்டு...

''இப்படித்தான்....! அப்ப சின்னனில நானும் என்ர சினேகிதன்மார் வீரசிங்கமும் முத்துத்தம்பியும் எங்கட இவ்விடத்து ‘ஊரெழு’ கிழக்கில் இருந்து, ‘மாவிட்டபுரம் கந்தசாமி’ கோயில் கார்த்திகைத் திருவிழா பார்க்க, வண்டில் பூட்டிக் கொண்டு பின்னேர வேளைக்கு வெளிக்கிட்டம். முந்தி ஆச்சி அப்புவிட்டக்கேட்டு அவயள் எங்கயும் போக விட்டாத்தானே நாங்களும் எங்கயும் போய் வரலாம்.

நாங்கள் மூண்டு இளந்தாரியளும் எங்கட தோட்டங்களுக்கு ஆளையாள் சேர்ந்து உதவுகிற கூட்டு இறைப்புக்காறர். அதிலயும் நாங்கள் மூண்டு பேரும் ஆள் ஆளுக்கு ஒற்றுமை தானே...? அப்ப எங்கட தோட்டத்தில போயிலை வெட்டிப்போட்டு வெங்காயம நட்டிருந்தனாங்கள். வெங்காயத் தோடத்துக்குள்ள கருணைக்கிழங்கு, ராசவள்ளி யெல்லாம் போட்டிருந்ததுதான். லோஸ்பான், பொலிடோல், மொனோகுறேட போஸ், அது இது எண்டு கண்ட நஞ்சு மருந்தும் அப்ப நாங்க பயிர் பச்சையளுக்கு அடிக்கிறேல்ல. வாழையெல்லாம் நீர்வேலித் தோட்டத்தில் இருந்து வாங்கிக் கொண்டு வந்து இங்க நாங்க போட்டா என்ன மாதிரி அப்ப ஆள் அளவுக்கு பெரிய பெரிய குலையளெல்லாம் வரும்!

அந்தமாதிரி எங்கட தோட்டமெல்லாம் அப்பத்தைக்க நல்ல செழிப்பாத்தான் பாக்க இருந்தது.

பின்ன என்ர அப்புவும், என்ர சினேகிதன்மார்களிண்ட தேப்பன்-மாரும் பிள்ளையள் நாங்கள் கேக்கிறம் எணடு போட்டு திருவிழா பாக்க ஓம் எல்லாரும் போயிற்று வாங்கோவெண்டு எங்களப் போக விட்டினம்.... அப்ப அந்தப் பொடியளும் என்ர வீட்ட வர வந்து மரவள்ளிக் கிழங்கும் இங்க பின்னேரத்துக்கு முன்னம் அவிச்சது அதையும் நாங்கள் உழுக்கொண்டு வாய்க்குள்ள போக கெதியா அப்பிடியே திண்டிட்டு வண்டிலைப் பூட்டிக் கொண்டு வெளிக்கிட்டம்.

அப்ப நல்ல சாதி வண்டில் மாடுகள்தானே எங்களிண்ட இங்க நிண்டது. கல் றோட்டுக்களில அந்த வண்டில் சில்லுப்பட்டம் உராய நல்ல பே ஓட்டம்? மாடுகளின்ர லாடன்களிலயும் கல்லுகள் உராஞ்சு நெருப்புப் பொறி பறக்கிற மாதிரி வீச்சா ஓடிச்சு அந்த மாடுகள்,

நாங்க அப்ப அப்படியே கோயிலடிக்குப் போய்ச் சேந்தா.... என்று ஒரு இழுவை இழுத்து தான் சொல்லி வந்ததை நிறுத்தினார் நல்லநாதன்.

கோமளா கூட்டிப் பெருக்கிற வேலையை விட்டுவிட்டு மாமனாரின் கதையை இவ்வளவு நேரமும் கேட்டபடி நின்றவள்..

அவள் மாமாவின் கதையில் திடீர் நிறுத்தம் ஏன்? என்று விளங்காமல், அவரின் முகத்தைப் பார்த்தாள். பிறகு கிளுவைக் கெட்டில் கிடந்த “ஹரிக்கன்” லாம்பைப் பார்த்தாள்.

அந்த விளக்கு உதிர்ந்து போன தன் காலங்களைப் பற்றிய கதையை தன் மாமனாருக்கு உள்ளேயாகப் புகுந்திருந்து, அவரின் வாயைப் பாவித்து சொல்வது போல, அவளுக்கு எண்ணத் தோன்றியது.

நல்லநாதனுக்கு கல்லு-முள்ளான பாதையில் நிர்வாணக்காலுடன் நடக்கத் தொடங்கி இருப்பது போல இப்போது ஒருவித தவிப்பு.

என்றாலும் தன்னை சுதாகரித்துக்கொண்டார்.

"அப்ப பிள்ள.... என்று சொல்லி வந்த தன் கதையிலே போய் மீண்டும் அவர் கொளுவினார்.

"நாங்கள் கோயிலுக்குப் போயிற்றம்மா...."

கோமளா மாமாவின் முகத்தைப் பார்த்தாள்.

"அங்க பொழுதுபட்டு இருட்டுப்பட காவடி. கரகாட்டம், பாற்சொம்பு, வாணவேடிக்கை அவிட்டு எண்டு எல்லாம் பாத்திட்டு வேளையோட அங்கயிருந்து நாங்கவெளிக்கிடுவம் எண்டு பாத்தா... அப்பதான் லாம்பு நாங்கள் கொண்டரேல்ல எண்டுறது எங்களுக்கு ஞாபகம் வந்துது. அட லாம்பில்லாம வண்டிலக் கொண்டு றோட்டால வெளிக்கிட்டு நாங்க எப்பிடி வீட்ட வாறது. ஏனெண்டா வண்டிலுக்கு இரவில் லாம்பு வெளிச்சம் துலாவில கட்டி இல்லாட்டா அப்ப பொலிஸ்சும் பிடிச்சு உடன வழக்கு எழுதிப்போடும் அப்பத்தைய சட்டமெல்லாம் அப்பிடித்தான் கடுஞ்சட்டம்! வண்டிலுக்குக் கூட நம்பர் அச்சுக் குத்தியில இருக்க வேணும்! வண்டிக்காரரிண்ட விலாசம்கூட தகட்டில எழுதிப்போடவேணும்? அந்த நேரம் அப்பிடித்தான்! அப்ப என்னடா செய்யிறதெண்டு நாங்கள் மூண்டு பேரும் யோசிச்சம்.

அப்ப இவன் வீரசிங்கம் எண்டவன் எனக்குச் சொன்னான்....

"யோயிச்சுப் பிரயோசனம் இல்லை மச்சான்! இனி என்னதான் செய்யிறது? விடிஞ்சாப் பிறகு நாங்கள் வெளிக்கிடுவம்! நீபோய் உது வழிய போயிலை விக்கிற இடமாப் பாத்து நல்ல போயிலையா வாங்கிக் கொண்டா நாங்கள் பத்துவம் எண்டான்."

அப்ப மற்றவன் அவன் முத்துத்தம்பியும் சொன்னான்...

"ஓம் மச்சான்! இவன் வீரசிங்கம் இப்ப சொன்னமாதிரி போயிலையெண்டாலும் வாங்கிக் கொண்டா இதில வைச்சு நாங்கள் எல்லாரும் பத்துவம் இந்தக் கோயிலில திருவிழாவுக்கு சின்ன மேளமும் இல்ல ஒண்டும் இல்ல வேற கோயிலில எண்டா பிராக்குக்கு சின்ன மேளக்காரி யளிண்ட ஆட்டமெண்டாலும் இருக்கும். அவளயள் ஆடுறதை எண்டாலும் பாத்துக் கொண்டிருக்கலாம். பொழுது போகும் எண்டு"

நான் பின்ன அவன் சொல்ல சரியடாப்பா நீங்கள் இவடத்தயா நிண்டு கொள்ளுங்கோ நான் போயிற்று வாறன் எண்டு சொல்லிப் போட்டு அப்பிடியே போயிலை வாங்கப் போனான்.

அங்க கடை போட்டிருந்த இடத்துக்கு நான் போனா அங்க ஒரு கிழவர் இருந்து போயிலை வித்துக் கொண்டிருந்தார்.

அதில நான் போய் "எப்பிடியப்பு இந்தப் போயிலை" எண்டு ஒரு போயிலையைக் கையில் எடுத்தன்.

"விரிக்காத அது வலு திறமான போயிலை! அதில ஒரு துண்டுப் புகையிலை இங்க கிடக்குத்தாறன் ஒருக்கா அதை உந்த லாம்பில நீ பத்திப்பார்" எண்டார்.

அவர் லாம்பு எண்டு ஒரு தரம் சொன்னது எனக்கு லாம்பு - லாம்பு - லாம்பு எண்டு, கனக்கத்தரம் சொன்னது மாதிரி காதுக்கு கேட்டுக் கொண்டு இருந்தது.

நான் அந்த லாம்பப் பார்த்துக் கொண்டு நிக்க அவர் போயிலைத் துண்டை நீட்டினார். நான் அதக் கையில வாங்கிக் கொண்டு சுருட்டுச்சுத்தி முனையில எச்சில் தேய்ச்சு ஈரப்படுத்தி வைச்சுக்கொண்டு சரி நான் இந்தப் போயிலையையும் எடுக்கிறன் அப்பு எவ்வளவு இதின்ர விலையணை? எண்டு அவரைக் கேட்டன.

கிழவன் "இருபத்தைஞ்சு சதம்" எண்டார்.

"சரி இந்தாபிடி...." எண்டு சொல்லிவிட்டு நான் காசைக் குடுத்தன். நான் கிழவரிட்டக் காசைக் குடுக்க இன்னும் அதில அந்த நேரம் நாலைஞ்சு பேர் வந்து போயிலை வாங்க வெண்டு நிண்டிச்சினம்.

உடன அப்ப எனக்கு ஒரு யோசினை மூளையில வந்திட்டுது. அதில விளக்குக்குப் பக்கத்தில இருந்து சிம்மினிய உயத்தினன். அதுக்க பேப்பர் துண்ட விட்டு நெருப்புக் கொளுத்தி சுருட்ட மூட்டிக் கொண்டு டப்பெண்டு லாம்பையும் நூத்திட்டு நான் கிழவரை ஒருக்காப்பார்த்தன்.

அதில நிண்ட ஆக்கிளையும் பார்த்தண். கிழவர் அப்பதன்ர யாவாரத்தோட நின்றார் அதில நிண்ட ஆக்களும் போயிலை வாங்கிற பைம்பலில நிண்டினம். நான் இதுதான் நல்ல தருணமெண்டு நினைச்சு அந்த லாம்பை நூத்திட்டு, அப்பிடியே அதக் கொண்டு அங்கால நடையைக் கட்டீட்டன்.

பிறகு என்று நல்ல நாதன் கதையை விட்டு விட்டு கழுத்தைத்தன் கைவிரல்களால் கடிக் குணத்தில் சொறிய கோமளா ஒரு முறை முனகி தான் கேட்டுக் கொண்டிருக்கிறேன் என்பதாக மாமா அறிந்து கொள்ள உறுதிப்படுத்தினாள்.

"பிறகு நான் அந்த விளக்கையும் கொண்டு வண்டிலடிக்குப் போனன்...."

அங்க என்ரை கையில உள்ள விளக்கக் கண்டிட்டு வீரசிங்கம். "உனக்கு எங்கால..... ஆரிட்ட இருந்து உதை நீ வாங்கிக் கொண்டந்தனீ....?" எண்டு கேட்டான்.

முந்தியெல்லாம் எங்கட வயசுப்பெடியள் ஆரும் கோயில் திருவிழா பாக்கவெண்டு வெளிக்கிட்டா வீட்டில உள்ளவயள் பெரிசா காசு கீசு செலவுக்கெண்டு தராயினம். அதால என்னட்டையும் பெரிசா காசு பொகக்றுக்க இல்லையெண்டுறது அவங்களுக்கும் தெரியும். அந்த

என்ர நிலைமையில விளக்கைக் கடையில நான் வாங்கின தெண்டும் எனக்கு அவங்களிட்டப் பொய் சொல்லவும் ஏலாது.

அப்பிடி பொய் சொல்லுற தெண்டாலும் அது சரியான பழைய லாந்தருமெல்லே? அந்த விளக்குச் சிம்மினி முழுக்க கறுப்பாப் புகையும் பிடிச்சுக் கிடக்கு. நான் இதையெல்லாம் யோசிச்சுப் போட்டு பிறகு அவங்களுக்கு சொன்னன்.

"இப்பிடி மச்சான் நான் அந்தப் புகையிலை விக்கிற கிழவரிட்ட இருந்துதான் இந்த விளக்கை இப்ப அடிச்சுக் கொண்டாந்திட்டன் எண்டு"

அவங்கள் நான் சொன்னதைக் கேட்டிட்டு.... "மச்சான் நீ... நீ எங்களவிட சரியான பெரிய ஆளடா" எண்டு சிரிசிரியெண்டு சிரிச்சாங்கள்.

நானும் சிரிச்சன்! ஆனாலும் என்ர மனசுக்க அவங்கள் இப்பிடியெல்லாம் என்னச் சொன்னதும் சிரிச்சதும் ஏதோ ஒரு மாதிரியான வெக்கமாகவும் துக்கமாகவும் இருந்திச்சு.

இப்ப விளக்கிருக்குத்தானே எண்டு போட்டு உடன நாங்கள் வண்டியில மாடுகளைப் பூட்டிக்கொண்டு கோயிலால இருந்து வெளிக்கிட்டம். இங்க வீட்டுக்குப் பக்கத்தில வண்டியில் வந்து சேர, அந்த விளக்கக் கொண்டு வீட்டுக்கு எப்பிடிப் பொறதெண்டு எனக்குச் சரியான யோசின.

அப்பநான் "அட இந்த விளக்கை என்னடாப்பா இனிச் செய்யிறது? ஆர் தன்ர வீட்ட இந்த விளக்கக் கொண்டு போறது?"

எண்டு அவங்களைக் கேட்டன். நான் அப்பிடிக் கேட்டதுக்கு "ஐயோ எங்களுக்கெண்டா உது வேண்டாம். நாங்கள் உந்தப் பழைய லாம்பை வீட்ட கொண்டு போகவும் ஏலாது... அங்க எங்க வீட்ட உதக் கொண்டு போனா எங்கால ஏதெண்டு உடன ஆளையாள் எங்களப் பிச்சுப் பிடுங்கவும் துடங்கீருங்கள்..." எண்டிட்டான் வீரசிங்கம்.

"எனக்கும் உந்தச் சோலி வேண்டாம் உதநான் வீட்ட கொண்டு போனா வீரசிங்கம் சொல்லுற மாதிரி நானும் துலைஞ்சன்...." எண்டிட்டான் முத்துத்தம்பி.

அவங்கள் எல்லாரையும் மாதிரி எனக்கும்கூட இத வீட்ட கொண்டு போக ஏலாதுதானே? எனக்கெண்டா இப்பிடியெல்லாம் வர வரக் கேவலமாப் போச்சு...! சீ இதையேன்ராப்பா நான் தரித்திரம் விழுவான் போய் தூக்கிக் கொண்டந்திட்டன். இந்த நாய் வேலையை இருக்கேலாமச் செய்து போட்டு இப்ப என்ர பாடு அதால கேடு கெட்டுப் போச்சு எண்டமாதிரி எனக்கிருந்துது.

நான் பிறகு! "சரி நீங்க போங்கடா உங்கட பாட்டுக்கு போய்த் துலையுங்கோ" எண்டு போட்டு அவங்கள அதால போக்காட்டி விட்டிட்டு வண்டிலை ஓட்டிக்கொண்டு எங்கட இந்தப்



பின்வேலிப் படலையடிக்கு வந்தன். இதால பிறகு படலையைத் திறந்து உள்ள வண்டிலை விட்டுட்டு

என்னடா இப்ப செய்வமெண்டு யோசிச்சன்.

அப்ப உந்தக் கிளுசறியா ஒரு இளம் மரம். மரத்தில கதியால் அந்த மாதம் வெட்டினதால நல்லா அது தழைச்சு சூடுகட்டினது மாதிரி இருந்திச்சு. அதுக்க ஒராள் ஏறி உள்ள இருந்தா வெளிய ஆருக்கும் தெரியாது. அவ்வளவு சடைப்பு! அப்ப அது தான் நல்ல ஒரு மறைவிடமெண்டு கண்டிட்டு, இந்த விளக்கை அதுக்க ஒரு சின்னக் கெட்டுக்குள்ள நான் கொளுவிட்டன்.

அதோட உந்த விளக்கும் நெடுக உவ்விடத்தைதான் கிடக்கு. இப்பிடி ஒரு தரித்திர வேலைய ஒரு நாள் நான் செய்ததால அத நினைச்சு நெடுகலும் எனக்கு மனசுக்கு ஒரு மனவருத்தம்தான்!

இப்பிடி என்ர சீவியத்தில இனிமேல ஒருக்காலும் உதுமாதிரிக் காரியமெண்டை நான் செய்யக் கூடாதெண்டு இந்த விளக்கைப் பாக்கிறநேரமெல்லாம் நான் இப்ப யோசிக்கிறன்.

அதாலதான உந்த விளக்கை யும் உதால நான் எடுக்காம இவ்வளவு காலமா நான் விட்டிருந்தன். இந்த விஷயம் எங்கட வீட்டில வேற ஆருக்குமே இது வரையில தெரியாது.

எண்டாலும் நீயம்மா இந்த வீட்டுக்கு எங்கட மருமகளா வந்தனீ.... எனக்கும் பொம்புளப்புள்ள இல்லை. அதால இப்ப நீ என்ர பெத்த மகள் மாதிரித்தான்.

நாங்கள் வயது போயிட்டாலும் தண்ணிய வெந்நிய வைச்சு எங்களுக்குத் தந்து நீதானம்மா எங்களையும் பார்க்கவேணும். அதாலதான் இப்பிடி நான் நடந்து கொண்டதுகளை எல்லாம் உனக்குச் சொன்னன். ஆனா என்ர சீவியத்தில அந்த ஒரு சம்பவத்துக்குப் பிறகு இப்பிடியாக பிழையான காரியமெண்டும் நான் இதுகாலம் மட்டும் செய்யவே செய்யேல்ல அம்மா..."

நல்ல நாதனுக்கு முகமெல் லாம் வாடிப்போய் கண் எல்லாம் நன்கு கலங்கி கண்ணீரும் வந்து விட்டது. மாமா கண் கலங்குவதைப் பார்த்து மருமகள் கோமளாவும் கண்கலங்கி விட்டாள்.

"என்ன மாமா நீங்க குழந்தைப்பிள்ளை மாதிரி...! இதுக்கெல்லாம் இப்ப போய் ஏன் மாமா நீங்க மனவருத்தப் படுறியள்? இது ஒரு சின்ன விஷயம்! அதயெல்லாம் நீங்க இனி மறந்திடுங்கோ... இப்ப முகத்தைக் கழுவிட்டு வாங்கோ நீங்க... தேத்தண்ணி குடிக்க....?"

என்று சொல்லிவிட்டு அவள், முற்றத்தில் கூட்டிப் பெருக் கவிருந்த மீதி இடத்தையும் கூட்டிப்பெருக்கி குப்பை அள்ளிக் கொட்டிவிட்டு கிணற்றண்டை போனாள். அங்கே மாமாவுக்கு

ஒரு பெரிய வாளியில் கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளி, அதில் நிரப்பிவிட்டு தானும் முகம் கை கால்களைக் கழுவிக்கொண்டு குசினிக்குப் போனாள்.

நல்ல நாதனுக்கு கிணற்றடியில் முகம் கைகால் கழுவி வீட்டுக்கு வர மட்டும் ஒரே யோசனை. மருமகள் தான் சொன்ன கதையில் தன்னைப்பற்றி பிழையான ஏதும் கருத்தைக் கொண்டிருப்பாளோ...."என்கிற மனக் குழப்பம்!

துவாய்த் துண்டில் தன் முகத்தைத் துடைத்துவிட்டு, வீட்டுத் திண்ணையிலே போய் அவர் இருந்தார்.

கோமளா, பொறுக்கிற அளவுக்கு சூடு உள்ள, பசும்பால் கலந்த கோப்பியைக் கொண்டு வந்து மாமனாருக்குக் கொடுத்தாள்.

மருமகள் கொடுத்ததை கை நீட்டி தான் வாங்கும்போது, நல்லநாதன் அவளின் முகத்தை பார்த்தும் பார்க்காத அளவில் பார்த்துக் கொண்டார்.

கோமளாவின் முகத்தில் அப்படி ஏதும் ஒரு மாற்றம் வெளியே தெரியவே இல்லை. வழமைபோல் உள்ளது மாதிரித்தான் இப்போதும் அவள் முகம் மலர்ந்த நிலையில் இருந்தாள்.

கோமளா அதாலே போன பிற்பாடு, நல்லநாதன் கோப்பிக் கோப்பையில் வாய் வைத்து கோப்பித் தண்ணீரை ஒரு உறிஞ்சு, உறிஞ்சினார்.

ஆகா பிரமாதம்! என்கிற மாதிரி, "பால்கோப்பி" திறமாக அவருக்கு ருசித்தது.

அந்தக் கோப்பியின் தரத்தைக் கொண்டு மருமகளின் குணத்தையும் அவர் அப்போது எடை போட்டார். அவருக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அன்றைய நாளெல்லாம் இதற்குப் பிறகு அவருக்கு உற்சாகமாகத்தான் கழிந்தது.

அடுத்தநாள் காலையில்.

வழமைபோல கோமளா தன் வீட்டு வேலைகளில் ஒன்றான முற்றத்தைக் கூட்டிப் பெருக்கும் வேலையை ஆரம்பித்தாள். அப்படியே கூட்டிப்பெருக்கி இடத்தைக் குறைத்துக் கொண்டு கிளுவை மரத்தடிப்பக்கம் விளக்குமாறுடன் அவள் வந்தாள்.

அந்த மரத்தடிப் பக்கமாக அவள் வந்தபோது அந்த ஹரிக்கன் லாம்பை பார்க்க வேண்டுமென்று கண்கள் அவளுக்குத் துருதுருத்தன.

உடனே அவள் அக்கறையோடு லாம்பு தூக்கிக் கிடந்த அந்த மரக்கிளையின் பக்கம் பார்த்தாள். அந்த இடத்தில் அந்த ஹரிக்கன் லாம்பு இப்போது இல்லாதிருந்தது.





லால்குடி சப்தரிஷி ராமாமிர்தம் ( லா.ச.ரா)
(30.10.1916-30.10.2007)

## லா.ச.ரா: 'மணிக்கொடி'த் தலைமுறையின் கடைசித் துளி

தமிழ் இலக்கிய உலகில் வீணை வாசித்ததைப் போல மொழியின் நரம்புகளை மீட்டிய எழுத்துக் கலைஞர் நிறைந்த வயதில் மறைந்திருக்கிறார்.

கவிதையின் அபூர்வமான தருணங்களை சிறுகதை, நாவல், கட்டுரை வடிவங்களுக்குள் வெகு இயல்பாக வெளிக்கொணர்ந்த அவருடைய எழுத்துக்களின் அடிநாதமாக இருப்பது சருகிற்கிடையே சலசலத்து விரையும் பாம்பினைப் போன்ற வேகம். அபாரமான அவருடைய கற்பனை வளம் பெண்களின் கூந்தல் வளைவை மோதிரச் சுருளாகவும், வெள்ளைச் சங்கின் நுனியிலிருந்து மெல்ல ஏறி அதன் முதுகிலிருந்து சட்டென்று சரிகிற சரிவை அவசரச் சரிவாகவும் பார்த்தவர். எங்கோ பொழிய சரசரவென விரைந்தேகும் மேகக்கூட்டம் என்று வர்ணித்தவர். அடுப்பில் தகிக்கும் தீயைக் குங்குமப் பிழம்பாகப் புதுவடிவம் காட்டியவர்.

"என் சொல்தான் என் உளி"

லா.சா.ராவின் இந்த வாக்குமூலத்தை அவருடைய எழுத்திற்குள் பயணிக்கிற ஒவ்வொருவரும் உணர முடியும்.

"நான் தேடும் பொருளோ, நயமோ தரும் சொல் கிட்ட ஒரோரு பக்கத்தை பதினெட்டு, இருபத்தேழு தடவைகள் எழுத நான் அலுத்ததில்லை.

இன்னமும் என் கதைகளின் சில முதல் நகல்களைப் பத்திரமாய் வைத்திருக்கின்றேன். எனக்கு அவைகளை விட்டுப் பிரிய மனமில்லை. அடிபட்ட மிருகம் மறைவிடமாய், சாகவோ, தேறவோ படுத்துத் தன் காயங்களை நக்கிக்கொள்வது போல், தேடிச் சலித்து மனம் சோர்ந்த சமயங்களில் என்முதல் நகல்களைப் புரட்டிப் பார்ப்பதுண்டு. ஒவ்வொன்றும் ஒரு ரணகளம். இக்குப்பைகள் என் இதயத்தில் வெடித்த பாளங்கள். அத்தனையும் என் ரத்தம். நான் சொல்லைத் தேடும் சான்று.

ஒரே குடும்பச் சூழலைப் பற்றியே எழுதுகிறார். நாவல், சிறுகதை எல்லாவற்றிலும் இவர் எழுதுவது ஒன்றைத்தான் என்கிற விமர்சனங்கள் இவரைச் சுட்டிக்காட்டி வைக்கப்பட்டபோது தானே ஒப்புக்கொள்கிற விதத்தில் இப்படி எழுதினார்.


"நான் என்னைப் பற்றித்தான் எழுதுகின்றேன். எனக்காகத்தான் எழுதிக்கொள்கிறேன். என்னை அதிகம் பாதித்தவர், இன்னமும் பாதித்துக் கொண்டிருப்பவர் என் பெற்றோர்கள்தாம். அவர்கள் காலமாகி வெகு காலமாகிவிட்டது. ஆனாலும் பாதிப்பு என் எழுத்தில் பிரதிபலிக்கிறது"

புத்ர, அபிதா, கழுகு, கல் சிரிக்கிறது - போன்ற நாவல்கள், ஜனனி, கங்கா, தயா, அஞ்சலி, இதழ்கள் என்று சிறுகதைத் தொகுப்புகளுமாய் இருபத்தைந்து தொகுப்புகள் அவருடைய நீண்ட வாழ்க்கைக்கான எழுத்துத் தடயங்கள் நம் முன்னால் காலத்தை நீந்திக் கிடக்கின்றன.

மணிக்கொடி இலக்கியவாதிகளின் வரிசையில் எஞ்சியிருந்த முதுமையான துளி லா.ச.ரா. அவருடைய பார்வை, குடும்பச் சூழலை விட்டு எழுத்தை வெளியேற விடாத உபாசக மதிப்பீடுகள் எதையும் பலர் ஒதுக்கிவிடலாம் சுலபமாய்.

ஆனால் அவர் உருவாக்கிய மொழியின் அற்புதத்தை எழுத வரும் இளைய தலைமுறை நிராகரிக்க முடியாது. அறுபது ஆண்டுகளாக நுணுக்கி மெதுவாக உருவாக்கிய அவருடைய படைப்பாற்றல் மிக்க உளி மின்னும் மொழியிடமிருந்து நிறையவே கற்றுக்கொள்ள முடியும், படைப்பின் தகிப்பை உணரக்கூடிய எந்த இளம் படைப்பாளியினாலும்.

நன்றி: புதியபார்வை (நவம்பர் 16-30-2007)



# ஈழத்து இலக்கியச் சிற்றிதழ்கள் வரிசையில் .... கொழுந்து

**-ஆசிரியர் அந்தனிஜீவா**

இலங்கை தமிழ் இலக்கிய வரலாற்றில் சிற்றிதழ்கள் என்றழைக்கப்படும் சிறு சஞ்சிகைகள் பெரும் பங்காற்றியுள்ளன என்பது வரலாற்று உண்மையாகும்.

தமிழகத்தில் 'மணிக்கொடி' சஞ்சிகையை குறிப்பிடுவது போல, இலங்கையில் 'மறுமலர்ச்சி' என்ற சஞ்சிகையின் இலக்கிய செயற்பாடு பற்றி இலக்கிய விமர்சகர்கள் குறிப்பிடத்தவறுவது இல்லை.

இதே போல மலையக இலக்கிய வளர்ச்சிக்கு சில சிறுசஞ்சிகைகள் பெரும் பங்காற்றியுள்ளன. மலையக தமிழ் சஞ்சிகைகள் மலையக மக்கள் என்றழைக்கப்படும் பெருந்தோட்டத் துறை மக்களின் துன்ப துயரங்களை சோகப் பெருமூச்சுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் பெரு முயற்சியில் ஈடுபட்டன. மலையக சிறு சஞ்சிகைகள் மூலம் இந்த மக்களின் அரசியல் பொருளாதாரம், சமூகம் கலை இலக்கியம் பண்பாடு என்பதை எடுத்து காட்டும் கண்ணாடிகளாக அமைந்துள்ளன.

மலையகத்தில் சிறுசஞ்சிகை வகையில் முதலில் பேசப்படுவது 'மலைமுரசு' என்ற சஞ்சிகை. இதனைத் தொடர்ந்து ஐம்பதுக்கு மேற்பட்ட சிறுசஞ்திரைகள் வெளிவந்துள்ளன. ஆனால் ஓரிரு சஞ்சிகைகளே காத்திரமான இலக்கியப்பணியை முன்னெடுத்துள்ளன என்பது மறுப்பதற்கில்லை.


எழுபதுகளில் எனக்கு ஏற்பட்ட மலையகத் தொடர்பும், எண்பதுகளில் ஆரம்பிக்கப்பட்ட மலையக கலை இலக்கியப் பேரவை என்ற அமைப்பை உருவாக்கி செயல்படத் தொடங்கியதும்... எங்களது இலக்கியப் பணி காற்றோடு கதை பேசிய கதையாக முடிந்துவிடாமல், எங்களது செயற்பாடுகளை முன்னெடுக்க 1985ம் ஆண்டு மலையக வெளியீட்டகம், என்ற பதிப்பகத்தின் மூலம் பதிப்பு பணியை முன்னெடுத்து மலையக படைப்புகளை நூலுருவில் வெளியிட்டோம். இதற்கு எனக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் இருவர். ஒருவர் எழுத்தாளர் சாரல்நாடன், மற்றவர் கவிஞர் முரளிதரன். அதன் பின்னர்




1988ம் ஆண்டு ஜனவரியில் 'கொழுந்து' (இதழ்-1, ஜனவரி, பெப்ரவரி, மார்ச் 1988) என்ற சஞ்சிகை கொண்டு வந்தோம். இது முத்திங்கள் இதழாக மலர்ந்தது.

கொழுந்து முதல் இதழில்....

**"அன்புள்ளங் கொண்டவர்களே,**
**நீண்ட நெடு நாட்களாக நாங்கள்**
**கண்ட கனவு வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது.**
**தேயிலைக்கு பசுமையும் தேநீருக்கு**
**சாயத்தையும் தந்த பாரம்பரியத்தின்**
**வழித்தோன்றல்கள் நாங்கள்.**
**மலை முகடுகளிலும், தேயிலைக் காடுகளிலும்**
**மானுடம் பாடும் வானம் பாடிகளின்**
**எண்ணங்களுக்கும் இதய தாகங்களுக்கும்**
**கொழுந்து களம் அமைக்கும்.**
**மலையக இலக்கிய வளர்ச்சிக்கு**
**சமூக பார்வையுடன் கொழுந்து**
**வலிவும் பொழிவும் ஊட்டும்.**
**புதிய விடியலில் முகம் காட்ட**
**விரும்புகிறவர்கள் எங்களோடு**
**இணைந்து பரணிபாட வரலாம்.**
**சமுதாய பார்வையுள்ள அனைவரையும்**
**அணைத்துக்கொண்டு செயல்படுவோம்.**
**மலையக எழுத்துலகின் பழைய**
**பரம்பரையும், புதிய தலைமுறையும்**
**எங்களோடு இணைந்து பயணம்**
**போக வந்துள்ளார்கள்**
**பாதை தெரிகிறது**
**பயணம் தொடர்சிறது'**




என்று ஆசிரியத்தலையங்கத்தில் குறிப்பிட்டேன்.


சிறு சஞ்சிகைகளுக்கு உரிய பலமும் பலவீனமும் 'கொழுந்து' இதழுக்குமுண்டு. அதனால் 1988ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட் 'கொழுந்து' ஏழு இதழ்களுடன் (மே, ஜுன் 1990) தன் பயணத்தை நிறுத்திக் கொண்டது.




1996ம் ஆண்டு மீண்டும் தன் பயணத்தை தொடர்ந்தது. அதன் பின்னர் 16வது இதழுடன் தன் பயணத்தை மீண்டும் நிறுத்திக் கொண்டது.

கொழுந்து சஞ்சிகையில் வெளிவந்த சில முக்கிய கட்டுரைகள் கவிதைகள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் நம்மவர் வெளியிடும் சஞ்சிகைகளில் மீள் பிரசுரமாக வெளிவந்துள்ளன.

2004ல் நான் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருந்த பொழுது, அங்கு நடைபெற்ற இலக்கியச் சந்திப்பின் போது பலர் என்னிடம் கொழுந்து பற்றி கேட்டார்கள்.




மீண்டும் கொழுந்து இதழை நாடு திரும்பியதும், எல்லோருடைய கரங்களிலும் சென்றடையும் வண்ணம் சிறிய பத்திரிகை வடிவில் கொண்டு வந்தேன். அதற்கு மிக முக்கிய காரணம் மலையகத்தின் இளைய தலைமுறையினரிடையே வாசிப்பை தூண்ட வேண்டும் என்பதே நோக்கமாகும். 'கொழுந்து' விட்டுவிட்டு வெளிவந்தாலும் கூட இதுவரை 26 இதழ்களைப் பிரசவித்துள்ளது.

கொழுந்து வெறும் பொழுது போக்கு சஞ்சிகை அல்ல. அதற்கு ஒரு நோக்கம் உண்டு. அதற்கு ஒரு அரசியல் உண்டு. கொழுந்து இதழை தொடர்ந்து வாசித்தவர்களுக்கு அது புரியும். கொழுந்து இதழைத் தொடர்ந்து கொண்டு வரவேண்டும் என்பதே என் இலட்சியமாகும்.



# இனியும் வேண்டாம் ! இன்னொரு வீடு

- ஏ.பீர்முகம்மது -

கடலுக்குச் சென்று
கரைதெரியாதோருக்கு
விளக்கம் தருவது
வெளிச்ச வீடுதான்.

அறம் பொருள் இன்பம்
ஆக்கிய வள்ளுவன்
வீடு பற்றி
விலகியே நின்றான்.

சின்ன வயதில்
சிறுவர்கள் சேர்ந்து
மண்வீடு கட்டி
மகிழ்ச்சி யடைந்தோம்.

காடுகளில் வாழ்ந்து
காலம் கடத்தியவன்
வீடுகளைக் கட்டி
விலாசங்கள் போட்டான்.


சினிமா தந்தது
சின்னவீடு
இனியும் வேண்டாம்!
இன்னொரு வீடு.

# நீத்தார் நினைவு

## கவிஞர். நீலாவணன்

✶ கவிஞர் நீலாவணன் இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் (தற்போது அம்பாறை மாவட்டம்) கல்முனைப் பிரதேசத்தில் பெரிய நீலாவணை கிராமத்தில் பிறந்தார். இயற்பெயர் சின்னத்துரை. சித்தாயுள் வேதவைத்தியர் திரு.கேசவப்பிள்ளை. திருமதி.கே.தங்கம்மா ஆகியோரின் மூத்த முதல்வன். பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

✶ 1948இல் எழுதத் தொடங்கிய நீலாவணனை அவர் கே.சி.நீலாவணன் எனும் பெயரில் 'சுதந்திரன்' பத்திரிகையில் எழுதிய **'பிராயச்சித்தம்'** சிறுகதையே இலக்கிய உலகிற்கு எழுத்தாளனாக அறிமுகப் படுத்திற்று. இவரது முதற்கவிதை 1948ம் ஆண்டிலே தினகரன் பாலர் கழகத்தில் பிரசுரமாயிருந்தாலும் கூட கே.சி.நீலாவணன் எனும் புனைபெயரில் 1953இல் சுதந்திரனில் வெளிவந்த **'ஓடி வருவதென்னேரமோ?'** எனும் கவிதை மூலமே கவிஞராக அறிமுகம் ஆனார். இவரது இறுதிக் கவிதை **'பொய்மை பொசுங்கிற்று'** என்பதாகும்.




✶ மட்டக்களப்பில் வழங்கும் கிராமியச் சொற்களை நீலாவணன் தன் கவிதைகளில் நிறையக் கையாண்டுள்ளார். மட்டக்களப்பு மக்களின் வாழ்வுமுறை, சடங்குகள், பழக்கவழக்கங்களை நீலாவணன் தன் கவிதைகள் வாயிலாக பதிவு செய்து கொண்ட அளவுக்கு வேறு எந்தக் கவிஞரும் இதுவரை செய்யவில்லை. மட்டக்களப்பு வாழ்க்கை முறை, சடங்குகள், பாரம்பரிய பழக்கவழக்கங்கள் குறித்து ஆய்வு செய்யவிழையும் சமூகவியலாளர்களுக்கு நீலாவணன் கவிதைகள் நிறையத் தகவல்களை வழங்கக் கூடியவை.

✶ மட்டக்களப்பின் கவிதைப் பாரம்பரியத்தின் ஊற்றுக் கண்களாகத் திகழ்பவை இம்மண்ணின் நாட்டார் பாடல்களே. இங்கு மட்டக்களப்பு பிரதேசம் எனக் கூறப்படுவது இலங்கையின்கிழக்கு மாகாணத்தில் வடக்கே வெருகல் ஆற்றையும தெற்கே குமுக்கன் ஆற்றையும் கிழக்கே வங்காளவிரிகுடாக் கடலையும் மேற்கே ஊவாமலைக் குன்றுகளையும் எல்லைகளாகக் கொண்டு விளங்கிய நிலப்பரப்பாகும். இந்நிலப்பரப்பில் காலங்காலமாக எழுதா இலக்கியமாகத் திகழ்ந்த நாட்டார் பாடல்கள் - (கிராமியக் கவிகள்) மட்டக்களப்பின் பேச்சுமொழியில் இம்மண்ணின் மண்வாசனைகமழும் வகையிலே புனையப்பட்டவை. இப்பாடல்களெல்லாம் பெரும்பாலும் தனிப்பாடல்களே. எனினும் செந்நெறி இலக்கியங்கள் என வரும் போது விபுலானந்த அடிகளார் மற்றும் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரின் கவிதைப் பாரம்பரியத்தின் அடியொற்றி மட்டக்களப்பு மண் ஆனது பல கவிஞர்களை ஈன்றெடுத்துள்ள போதிலும் இவர்களில் எவருமே - கவிஞர் நீலாவணனைத் தவிர ஈழத்தமிழ் பிரதேசங்களில் தனித்துவம் வாய்ந்ததான மட்டக்களப்பின் பாரம்பரியங்களையும், சடங்குகளையும் அம்மக்களின் வஞ்சகமில்லாத வாழ்க்கை முறைகளையும் வைத்துக் காவியம் ஒன்றினை வடித்துத் தரவில்லை. ஆனால் கவிஞர் நீலாவணன் மட்டக்களப்பு மண்ணின் வாழ்க்கையை இலக்கியமாக்க எத்தனித்தார். அதன் விளைவே அன்னாரின் **'வேளாண்மைக்'** காவியம்.

✶ 1960களில் கல்முனை எழுத்தாளர சங்கத்தைச் ஸ்தாபித்து அதன் தலைவராகப் பலவருடங்கள் பொறுபேற்று வழி நடாத்தியதன் மூலம் கல்முனைப் பிரதேசத்திலே எழுத்தாளர் பரம்பரையொன்றை நீலாவணன் உருவாக்கினார். மருதூர்க் கொத்தன், மருதூர்க்கனி, அன்பு முகையதீன், மு.சடாட்சரன், கல்முனைப் பூபால், மருதூர்வாணன், பாலமுனை பாறூக், எம்.ஏ.நு..மான், முல்லைவீரக்குட்டி, கனகசூரியம், சத்தியநாதன், நோ.மணிவாசகன், ஆனந்தன் என்று ஓர் இலக்கியப் பட்டாளமே அவரின் அரவணைப்பில் உருவானது. கல்முனையிலே, அவரின் இலக்கியச் சகாக்களாக சண்முகம் சிவலிங்கம், பாண்டியூரன், ஜீவா - ஜீவரத்தினம், பஸீல் காரியப்பர், ஈழமேகம் பக்கீர்தம்பி ஆகியோர் விளங்கினர். இலங்கையின் எந்தவொரு தனிப்பிரதேசத்திலும் கல்முனைப் பிரதேசத்தைப் போல் அதிக எண்ணிக்கையான இலக்கியவாதிகள் இருந்ததில்லை. இவ்விலக்கியவாதிகள் அனைவரும் கவிஞர்கள் என்பது இன்னுமொரு சிறப்பு, இதற்குக் காரணம் கவிஞர் நீலாவணனே.

✶ அகில இலங்கை ரீதியாக, தினகரன் பத்திரிகை மூலம் (1962ல்) நடைபெற்ற இலங்கையர்கோன் சிறுகதைப் போட்டி, இலங்கையர் கோன்விழா, **'மழைக்கை'** கவிதை நாடக அரங்கேற்றம் என்பன கல்முனை எழுத்தாளர் சங்கம் நடாத்திய குறிப்பிடத்தக்க நிகழ்சிகளாகும்.

'மழைக்கை' கவிதை நாடகம் கிழக்கிலே (1963ல்) முதன் முதல் மேடை ஏறிய கவிதை நாடகமாகும். மகாபாரதத்தில் செஞ்சோற்றுக் கடன் தீர்த்த கர்ணனின் கடைசிகாலக் கதையைக் கருவாகக் கொண்ட இந் நாடகம் அறுசீர் விருத்தப்பாக்களினால் மிகவும் நயமான பேச்சோசைப் பண்பில்

அமைக்கப் பெற்ற இலகு நடை மேடை நாடகம் ஆகும். இந் நாடகத்தில் மு.சடாட்சரம்-கர்ணன்; நீலாவணன்-குந்திதேவி; மருதூர்க்கொத்தன்-கிருஷ்ணன; எம்.ஏ.நு.'.மான்-இந்திரப்பிராமணன்; மருதூர்க்கனி-பிராமணன்; கே.பீதாம்பரம்-இந்திரன் என்று பாத்திரமேற்று நடித்தமை குறிப்பிடத்தக்கது. 'மழைக்கை' 1964 இல் வீரகேசரியிலும் வெளிவந்தது.

* 1967ல் கல்முனை தமிழ் இலக்கியக் கழகத்தை ஆரம்பித்து (தலைவர் சண்முகம் சிவலிங்கம்; செயலாளர் மு.சடாட்சரன்; கௌரவ ஆசிரியர்-நீலாவணன்; காப்பாளர் கே.ஆர். அருளையா B.A) ; **'பாடுமீன்'** என்னும் இலக்கிய இதழை நடாத்தினார். அது இரண்டு இதழ்களே வந்தாலும் அதற்கு இலக்கிய உலகில் தனி இடம் உண்டு.

* 1976ல் இவரது **'வழி'** என்னும் முதலாவது கவிதை நூல் வெளிவந்தது. இது இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுள்ளது.

* 1982ல் நீலாவணனது **'வேளாண்மை'**க் காவியம் நூலுருவாக வந்துள்ளது. 2001இல் 'ஒத்திகை' யும்; (நீலாவணன் கவிதைகள்) 2003இல் **'ஓட்டுறவு'** ம் (நீலாவணன் கதைகள்) நீலாவணனின் மகன் எஸ்.எழில்வேந்தன் அவர்களால் வெளியிடப்பெற்றன.

* நீலாவணனுடன் நெருக்காமாயிருந்த ஏனைய சமகால இலக்கிய நண்பர்களாக எஸ்.பொன்னுத்துரை. இளம்பிறை எம்.ஏ.ற.'.மான். அண்ணல், இலங்கையர்கோன், ராஜபாரதி, மண்டூர் சோமசுந்தரம்பிள்ளை, வ.அ.இராசரத்தினம், கனகசெந்திநாதன், ஏ.ஜே.கனகரத்னா. மஹாகவி ஆகியோர் இருந்துள்ளனர். இவரது இலக்கிய முயற்சிகளுக்கு ஊக்கம்கொடுப்போராக கல்முனையிலே டாக்டர் எம்.முருகேசபிள்ளை அவர்களும், கே.ஆர்.அருளையா B.A அவர்களும் திகழ்ந்துள்ளனர். இவரது படைப்புக்களுக்குக் களம் கொடுத்த பத்திரிகையாளர்களில் சுதந்திரன் எஸ்.டி.சிவநாயகம், தினகரன் ஆர்.சிவகுருநாதன் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். வித்துவான் எப்.எக்ஸி.நடராசா புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை. புலவர் ஆ.மு.ஷரிபுத்தீன் ஆகியோர் இவரது எழுத்துக்களையிட்டு பெருமிதம் கொண்ட மூத்த தலைமுறை அறிஞர்களாவர்.

* நீலாவணன் உயிர்வாழ்ந்த காலத்தில் அவர் முறையாக வெளிப்படுத்தப்படவில்லை என்ற விடயம் மிகவும் விசனிக்கத்தக்கது. பல்கலைக்கழகப் பின்புலத்தில் பட்டம் என்ற அங்குசத்தை வைத்துக் கொண்டு ஈழத்து இலக்கிய உலகின் விமர்சனத் துறையை ஒரு



காலத்தில் ஆக்கிரமித்துக் கொண்ட பேராசிரியர்களும் அவர்களது மாணவ சகாக்களும் தாங்கள் வரித்துக்கொண்ட கலை, இலக்கிய, அரசியல் கோட்பாட்டு முகாம்களுக்குள் முடங்காதவர்களை ஈழத்து இலக்கிய உலகில் இருட்டடிப்புச் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டு உண்டு. அவ்வாறு இருட்டடிப்புச் செய்யப்பட்டவர்களுள் கவிஞர் நீலாவணனும் ஒருவர். எனினும் நீலாவணன் மறைக்குப் பின் இதில சிறிது மாற்றம் ஏற்பட்டதையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். அந்த வகையில் நீலாவணன் மறைவுக்குப்பின் 1994.இல் கலாநிதி சி.மௌனகுரு எழுதிய **'கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன்' (நீலாவணன் வாழ்வும் இலக்கியப் பணியும்)** என்ற நீலாவணன் பற்றிய நூல் முற் குறிப்பிட்ட பேராசிரியர்கள் விட்ட பிழைக்கு பின்னால் வந்த மாணவ சகாக்கள் தேடிய பிராயச்சித்தம் போலும். எனினும் நீலாவணன் உயிர் வாழ்ந்த காலத்திலேயே டொமினிக் ஜீவா அவர்களின் 'மல்லிகை' மே 1970 இதழில் நீலாவணனின் உருவப்படத்தை அட்டைப்படமாக வெளியிட்டதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இவரைப்பற்றிய குறிப்பை சி.பி.சத்தியநாதன் எழுதியிருந்தார். நீலாவணன் மறைவுக்குப் பின்னர் 1994இல் எஸ்.பொ என்னுந்துரை அவர்களும் நீலாவணன் நினைவுகளை நூலாக்கியிருந்தார். **(நீலாவணன் -எஸ்.பொ நினைவுகள்)** கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது மாதாந்த வெளியீடான **'ஓலை'**யின் 12வது இதழை (ஜனவரி 2003) நீலாவணன் நினைவுச் சிறப்பிதழாக வெளியிட்டது.

* இவரது துணைவியார் திருமதி அழகேஸ்வரி சின்னத்துரை பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவருக்கு எழில்வேந்தன், வினோதன் ஆகிய இரு புதல்வர்களும் எழிலரசி, ஊர்மிளா, கோசலா ஆகிய மூன்று புதல்விகளும் உள்ளனர்.

**- செங்கதிரோன் -**

எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களிடம் இருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர், 'செங்கதிர்' இல:19, மேல்மாடி வீதி,மட்டக்களப்பு.

# நினைவிடை தோய்தல்



ஈழத்தின் மூத்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் தங்கள் நினைவுகளை மீட்டுவதற்கும் அனுபவங்களைப் பகிர்வதற்குமான களம் இது. தொடர்ந்து வைப்பவர் ஈழத்தின் மூத்த ஊடகவியலாளர் திரு.வி.ஏ.திருஞானசுந்தரம் (முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) அவர்கள்.

## அந்த மூன்று ரூபா

1952 என்று நினைக்கிறேன், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் கல்வி கற்ற காலம். "சுதந்திரன்" செய்திப்பத்திரிகை வாரா வாரம் வெளிவந்து கொண்டிருந்தது. அதில் 'குயுக்தியார்' என்ற புனை பெயருக்குள் மறைந்திருந்து அமரர் எஸ்.ரீ.சிவநாயகம் அவர்கள் வாசகர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தார். கேள்வி - பதில்கள் ஒரு முழுப்பக்கத்தையுமே ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. ஆயினும் வாசகர்கள் அவற்றை மிக அக்கறையுடன் வாசிப்பதுண்டு. அப்பக்கத்தில் ஒரு கட்டமிடப்பட்ட ஒரு குறிப்பு 'சிறந்த கேள்விக்கு ரூ 3/= பரிசு'

ஒரு சமயம் நான் கேள்வியொன்றை சுதந்திரனுக்கு அனுப்பி வைத்தேன். கேள்வி இதுதான் **"புதுமணத் தம்பதிகள் மகிழ்ச்சியாக இருப்பது ஏன்?"** குயுக்தியார் அளித்த பதில் இன்று எனக்கு நினைவில்லை. ஆயினும் வழமைபோல அது ஒரு குத்தலான சுவைக்கக் கூடிய பதில். இதில் விசேடம் என்னவெனில், முதல்முதலாக நான் அனுப்பிவைத்த அந்த கேள்விக்கே பரிசாக ரூ3/= கிடைத்துவிட்டது. அளவில்லா ஆனந்தமாக இருந்தது. ரூ 3/=ஐ வைத்து என்ன செய்வது? ஏதோ நினைத்துவிட்டு அதை அம்மாவிடம் கொடுத்து "வைத்திருங்கோ எனக்கு அது தேவைப்படும்" என்று கூறி வைத்தேன்.

அதே வேகத்தில் கடிதம் ஒன்றை எழுதி கொழும்பு 11, நொறிஸ் வீதி ஏ.கே.பொன்னையாபிள்ளை அன்ட் சன்ஸ் என்ற கடைக்கு அனுப்பிவிட்டேன்.



பரிசுத் தொகைக்கும் பொன்னையாபிள்ளையின் கடைக்கும் என்ன தொடர்பு?

என்றோ ஒரு நாள் ஏதோ ஒரு நாளேட்டில் பொன்னையாபிள்ளையின் கடைபற்றி பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் ஒன்றைப் பார்த்ததாக ஞாபகம். அதில் சினிமாப் பாடல் புத்தகங்களை வி.பி.பி போஸ்டில் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறப்பட்டிருந்தது. அக்காலத்தில் சினிமாக்களைப் பார்த்து மனனஞ் செய்து பாடுவதில் எனக்கு அதீத ஆர்வமிருந்தது. எமது குடும்பப் பின்னணியில் இசைக்கு இடமுண்டு. அதனால் தானோ என்னவோ, ஊரில துலாவில் நீரெடுத்து குளிக்கும் போது கூட "சின்னச் சின்ன வீடு கட்டி சிங்கார வீடு கட்டி ஒன்றாக வாழ்ந்தோம் முன்னாளே" என்று உரக்க பாடிக் கொண்டே இருப்பேன். அந்த அளவுக்கு இசையில் ஈடுபாடு கொண்டிருந்தேன்.

இந்த ஆர்வம் காரணமாகவே பரிசுத்தொகை கிடைத்ததும் அதற்கு சினிமாப் பாடல் புத்தகங்களை வாங்கத் துணிந்தேன். வீட்டில் யாரும் தடுக்கவில்லை.

அக்காலத்தில் சினிமா பாடல்கள் அடங்கிய புத்தகங்களில் பாடல் வரிகளுடன் சேர்த்து பாடலாசிரியர் பெயர், பாடல் அமைந்த இராகம், தாளம் போன்ற விபரங்களும் காணப்படும். பாடுபவர்களும் இசையில் தேர்ச்சி பெற்றவர்களாகவே இருந்தனர்.

நான் விண்ணப்பித்தபடி முப்பது புத்தகங்கள் கிடைத்தன. ஒரு புத்தகம் 10 சதம் ஆயினும் அதன் பெறுமதியை அளவிட முடியாது என்றே சொல்வேன். மீரா (எம்.எஸ்.சுப்புலஷ்மி) வாஸவதத்தை (வசுந்தராதேவி), லாவண்யா (குமாரி கமலா), ஹரிதாஸ்-அம்பிகாபதி, ராஜமுக்தி - சிந்தாமணி - திருநீலகண்டர் சிவகவி (எம்.கே.தியாகராஜ-பாகவதர்), ஜகதலப்பிரதாபன் இரத்தினகுமார் (பி.யு.சின்னப்பா), வேதாள உலகம் (ரி.ஆர்.மகாலிங்கம்) சக்ரதாரி (வி.நாகையா) கைதி (எஸ்.பாலசுந்தர்) இப்படி முப்பது புத்தகங்களையும் முப்பது முத்துக்களாக கருதி, அன்று முதல் இன்று வரை பாதுகாத்து வருகிறேன்.

ஒரு சமயம், எங்கள் மதிப்புக்குரிய நண்பர் சில்லையூர் செல்வராஜன் எமது வீட்டுக்கு வந்திருந்தார். அப்பொழுது எனது மூத்தண்ணா காலஞ்சென்ற வீ.ஏ.சிவஞானம் அவர்கள், இசைஞானம் மிக்கவர், அங்கிருந்தார். அப்பொழுது எங்கள் வீட்டு வானொலிப் பெட்டியில் பாடல்கள் ஒலிபரப்பாகி கொண்டிருந்தன. சில்லையூர் அப்பாடல்களில் ஒன்றை குறிப்பிட்டு (எது என்பது நினைவில்லை) 'இது என்ன இராகத்தில் பாடப்பட்டது'என்று என்னைக் கேட்டார். எனக்கு நிச்சயமாயகத் தெரியவில்லை. அப்படியே கூறியும் விட்டேன். இதனைக் கேட்ட மூத்தண்ணா

என்னை விழித்து, எனது சினிமாப்பாடல் தொகுப்பை எடுத்து வரும்படி செய்து, படம் ஒன்றின் பெயரைகுறிப்பிட்டு பாடலையும் கூறி அப்பக்கத்தை புரட்டிப் பார்க்கச் சொன்னார். படம் சிவகவி, பாடியவர் எம்.கே.தியாகராஜ பாகவதர், இராகமோ சிந்துபைரவி பாடல் "வதனமே சந்த்ரபிம்பமோ, மலர்ந்த ஸரோஜமோ". இப்பாடலை அவர் இசைத்து காண்பித்தார். வானொலியில் கேட்ட பாடலும், இப்பாடலும் ஒரே இராகத்தில் அமைந்திருந்ததை கண்டோம். இவ்வாறு இராகத்தை அடையாளம் காண இந்த தொகுப்பு பின்னாளில் எனது வானொலி வாழ்வில் பெரிதும் உதவியது இந்த வகையில் அந்த மூன்று ரூபா எனக்கு அளித்த உற்சாகத்தை இன்றும் நினைத்துப் பார்கின்றேன்.

-வி.ஏ.திருஞானசுந்தரம்.

## "சிரி" கதை

குடும்பப் பெண் (மனைவி) ஒருவர் திடீரென்று இரவில் தனது குடும்ப 'டாக்டருக்கு' த் தொலைபேசியில் சொன்னாள் "டாக்டர் உடனே எங்கள் வீட்டுக்கு வாருங்கள்." பதட்டமடைந்த டாக்டர் திருப்பிக் கேட்டார் "ஏன்? என்ன நடந்தது."

"எனது புருசனின் வாய்க்குள்ளே எலியொன்று நுழைந்துவிட்டது அது இன்னும் வெளியில் வரவில்லை" -பெண் பதில் சொன்னாள்.

"சரி நான் புறப்பட்டு பத்து நிமிடங்களுக்குள் அங்கு வருகிறேன். நான் வருவதற்குள் முதலுதவிச் சிகிச்சையாக நெத்தலிக்கருவாட்டுத் துண்டொன்றை அல்லது சிறுதேங்காய்க்கட்டியை உனது புருசனின் வாய்க்கு நேரே பிடித்துக்கொண்டிரு. மணத்திற்கு உள்ளே போன எலி வெளியில் வரப்பார்க்கும். அதற்கிடையில் நான் வந்துவிடுவேன்" என்று டாக்டர் அறிவுறுத்தினார்.

சொன்னபடி டாக்டர் சிறிது நேரத்தால் பெண்ணின் வீட்டை அடைந்தார். தனது அறிவுறுத்தலுக்கு மாறாக அந்தப் பெண் தனது புருசனின் வாய்க்கு நேரே பெரிய மாட்டிறைச்சித்துண்டொன்றைப் பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவர் பெண்ணிடம் "உன்னை நெத்தலிக்கருவாடு அல்லது தேங்காய்த் துண்டைத்தானே பிடிக்கச் சொன்னேன். மாட்டிறைச்சித் துண்டிற்கு எலி வராது" என்றார் சற்றுக் கோபமாக. அதற்கு அந்தப் பெண் சாவகதானமாக "இது எலிக்கு அல்ல டாக்டர் துரத்திப்போன பூனைக்கு" என்றாள்.

-கோபி



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# இளையோர் பக்கம்




இப்பகுதி இளையோருக்கானது. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி: இளங்கதிர், இல:19 மேல்மாடி வீதி, மட்டக்களப்பு.

- ஆசிரியர்

## புதுமுக அறிமுகம்

### செல்வி. ஞானப்பிரகாசம் சுமதி



'சுவடுகளும்..... சுமைகளும்....' எனும் கவிதைத் தலைப்புடன் உங்களுடன் அறிமுகமாகும் நான் ஞானப்பிரகாசம் சுமதி. மட்டக்களப்பு மாவட்டத்தில் வயல் வளம் நிறையப் பெற்ற மரப்பாலம் எனும் அழகிய கிராமத்தில் 1984ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25ம் நாள் பிறந்தேன். ஒரு சகோதரி, ஒரு சகோதரன் ஆகியோரைக் கொண்ட சிறிய குடும்பம்.

எனது இளமைக் கல்வி மரப்பாலம் த.க.பாடசாலை யிலும், மற்றும் செங்கலடி தமிழ் மகாவித்தியாலயத்திலும் அமைந்தது. அவ்வேளையில் கவிதை, பேச்சு, பாடல், விவாதம் ஆகிய போட்டிகளில் பங்கேற்று பரிசில்கள் பெற்றுள்ளேன். இந்நேரங்களில் எனக்கு உறுதுணையாக இருந்தவர்கள். எனது பெற்றோரும், எனது ஆசிரியர்களும், நண்பர்களும்.

மேலும் எனது உயர்தரக் கல்வி, மட்/சிலியா. பெண்கள் உயர்தர பாடசாலையில் அமைந்தது. அப்போது கட்டுரை, வினா-விடை போட்டிகளில்

பங்கேற்று பரிசுகள் பெற்று ள்ளேன். பின்னர் செல்வி. மிதிலா சங்கரன் ஆசிரியையிடம் பரதக் கலையை பயின்று வருகின்றேன். அத்துடன் தொழிநுட்பக் கல்லூரியில் தொழில் நுட்பக்கல்வியை முடித்துக் கொண்டு தற்போது திட்ட சேவைகளுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் (U.N.O.P.S) எனும் நிறுவனத்தின் கிழக்கு பிரதேச அலுவலகத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தராக 2007ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கடமையாற்றி வருகின்றேன். தற்போது பெற்றோருடன் செங்கலடியில் வசித்துவருகின்றேன்.

---

# சுவடுகளும்..... சுமைகளும்....!

கடற்கரை மணலில் பதித்திட்ட
காலடிச் சுவடுகளாய்......
அடையாளம் தெரியாமல்
நெஞ்சில் ஆயிரம் சுமைகள்..........!

நேசங்கள் எல்லாம் பிரிவு
எனும்வியப்பான பாதையில்........!
என்னை நானே
யாசிக்க முடியாத தவிப்புகள் - அவை
பரிதவிப்புகள்.........!



நேற்று என்பது நான்
ஏறெடுத்துப் பார்த்த படியானது :
இன்று என்பது ஏணியானது..........!
இனி நாளை என்ன - என்
நம்பிக்கையின் இலக்கா..............!

பதித்திட்ட சுவடுகள் தொலைந்திடும் போது
அலையடிப்பது மட்டும் என்னவோ!
அடிமனதின்
விளிம்புகளில் தான்...........!

இடையில் இப்படி...............!
இடையில் இப்படி...............!

கடற்கரை மணலில் - பதித்த
காலடிச் சுவடுகளாய்..........!
அடையாளம் தெரியாமல்
நெஞ்சில் ஆயிரம் சுமைகள்...........!

- சுமதி -

# சிறந்த நண்பர்கள்



அது ஒரு கிராமப் புறப்பாடசாலை ஏறக்குறைய முந்நூறு மாணவர்களைக் கொண்டது. அப்பாடசாலையில் எட்டாம் தரம் வரையே வகுப்புக்கள் உள்ளன.

ஆறாம் தரத்திற்கு மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் மூன்று நாட்கள் ஒரு கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு நாட்டின் முக்கியமான சில இடங்களை பார்வையிடுவதாகத் தீர்மானித்தனர்.

ஆறாம் வகுப்பு "ஏ" பிரிவில் முப்பத்து மூன்று மாணவர்களில் முப்பத்திரண்டு பேர் சுற்றுலாவுக்குச் செல்வதற்காகத் தமது பெயரைப் பதிவு செய்து பணமும் கட்டி விட்டனர். அவ்வகுப்பில் நாராயணன் மட்டும் பெயரைக் கொடுக்கவோ பணம் கட்டவோ இல்லை.

அந்த வகுப்பில் இருந்த மாணவர்கள்மிக ஒற்றுமையானவர்கள். அவர்களுக்கு நாராயணனை விட்டு விட்டு தாம் மட்டும் சுற்றுலா செல்வது மிகுந்த கவலையைக் கொடுத்தது.

எல்லோரும் இது பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வந்தனர். கடைசியாக ஒவ்வொருவரும் ஆளுக்கு இருபது ரூபா போட்டு நாராயணனுக் காகப் பணம் கட்டுவதெனத் தீர்மானித்து தம் வகுப்பாசிரி யரிடம் நாராாணனின் பெயரையும் சேர்த்துக் கொள்ளுமாறு கூறினர்.

நாராயணன் சில நாட்களாகப் பாடசாலைக்கு வரவில்லை. சுற்றுலாவுக்குப் பணம் கட்டமுடியாததால் தான் அவன் வரவில்லை என அவர்கள் யூகித்தனர்.

மறுநாள் இருபது ரூபா வீதம் சேர்த்து கிடைத்த காசில் சுற்றுலாவுக்கான ஐநூறு ரூபாவையும் சுற்றுலாப் பொறுப்பாசிரியரிடம் கட்டிவிட்டு அதற்கான ரசீதுடன் அன்று பிற்பகல் இரு மாணவர்கள் நாராயணன் வீட்டிற்குச் சென்றனர்.

நாராயணன் தந்தையை இழந்த ஏழைச் சிறுவன். தாய் மிகவும் சிரமப்பட்டு அப்பம் சுட்டு விற்றுத்தான் பிள்ளைகள் இருவரின் படிப்புச் செலவையும் சாப்பாட்டுச் செலவையும் சமாளிக்கிறாள். ஆயினும் சுற்றுலா போன்ற விடயங்களுக்காக அவளால் பணம் செலவழிக்க முடியாத நிலை.

மாணவர்கள் இருவரும் நாராயணன் வீட்டிற்கு வந்து தாங்கள் எல்லோரும் சேர்ந்து நாராயணனுக்காகப் பணம் கட்டியிருப்பதாகக் கூறி ரசீதை அவன் கையில் கொடுத்தனர். அதுமட்டுமன்றி அவனுக்கு கைச்செலவுக்காக நூற்று நாற்பது ரூபா பணம் தம்மிடம் இருப்பதாகவும் சுமதி பிரயாணப்பை தருவதாகவும் நஸீர் சப்பாத்து சோடி தருவதாகவும் டேவிற்றும் ரமேசும் ஒவ்வொரு சோடி உடுப்புத் தருவதாகவும் கூறினர்.

நாராயணன் சந்தோச மிகுதியால் பேச நாவெழாது நின்றான். அவனுக்கு தன் நண்பர்களை நினைக்கப் பெருமையாக இருந்தது.

சிறுவர்கள் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த நாராயணனின் தாய் சங்கரிக்கு மனம் நிறைந்து போனது. எத்தனை நல்ல எண்ணம் இந்தப் பிள்ளைகளுக்கு என்று நினைத்தாள்.

"நீங்க நாராயணனோட இவ்வளவு அன்பான பிள்ளையளா இருக்கீங்களே மக்காள். உங்கள ஒரு குறையுமில்லாம கடவுள் காப்பாத்தவேணும்." என்றாள் கண்கள் பனிக்க.

மறுநாள் வகுப்பாசிரியர் அந்த மாணவர்களை அழைத்து அவர்களின் நல்ல மனசையும் நட்பையும் வெகுவாகப் பாராட்டினார். "இந்தச் சிறுவயதில் உங்களுக்கு இவ்வாறான நல்ல பண்புகள் இருப்பதையிட்டு உங்கள் வகுப்பாசிரியர் என்ற வகையில் நான் பெருமைப்படுகின்றேன்" என்றார்

மாணவர்களே! நீங்களும் அந்த வகுப்பு மாணவர்களைப் போல் உங்கள் நண்பர்களையும் நேசித்து அவர்களுக்கு உதவி செய்து வாழப் பழகிக்கொள்ளலாமல்லவா?

**-யோகா யோகேந்திரன்**

நன்றி: "வாருங்கள் கதைப்படிப்போம்"



ஆப்ரகாம் லிங்கன் ஏழை தச்சுத் தொழிலாளியின் மகன். அமெரிக்காவின் அதிபர் ஆனார். அடிமைத்தனத்தை உடைத்தெறிந்தவர் யார் என்று கேட்டால் உலகில் எந்த நாட்டில் உள்ள குடிமகனும் சட்டென்று சொல்லிவிடுவான் ஆப்ரகாம் லிங்கன் என்று.

# வறுமையை வரலாறாக்கிய ஆப்ரகாம் லிங்கன்

1809 ம் ஆண்டு பிப்ரவரி 12-ந் தேதி ஆப்பிரகாம் லிங்கன் பிறந்தார். அவர் ஒரு வருடம்தான் பள்ளிக்குச் சென்றார். வறுமை தந்தையின் தச்சுத் தொழிலை நோக்கி விரட்டியது ஆனால் லிங்கனின் சிந்தனையோ கல்வியையே நினைத்தது.

தந்தைக்கு உதவி செய்து கொண்டே ஓய்வு நேரத்தில் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார். கோடரி பிடித்த அவர் கைகள் சட்ட புத்தகத்தை எடுத்தது. சட்டம் படித்து பட்டம் பெற்றார். வழக்கறிஞர் ஆனார். தச்சுவேலையில் போதிய வருவாய் இல்லாததால் மளிகைக் கடையிலும் வேலை செய்தார். பின்பு ராணுவத்திலும் பணியாற்றினார்.

அப்போது அமெரிக்காவில் இருந்த அடிமை முறை சிறுவயதிலேயே லிங்கனை வெகுவாக பாதித்து. அப்போது அடிமை முறை ஒழிக்க வேண்டும் என அடிமனதில் உறுதி கொண்டார்.

அக்காலத்தில் இது குறித்து அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் அடிமை வாழ்வில் அல்லல் பட்ட ஒவ்வொரு அமெரிக்கர்களையும் தட்டி எழுப்பியது. அவர் செல்லும் இடமெல்லாம் மக்கள் கூட்டம் அலைகடலென திரண்டது.

1861-மார்ச் மாதம் லிங்கன் குடியரசு கட்சி சார்பில் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக் கப்பட்டார். தனது அதிகாரத்தை பயன்படுத்தி அடிமை முறையை முற்றிலும் ஒழித்தார்.

நான்காண்டு (1861-1865) காலம் அமெரிக்காவில் நடந்த உள்நாட்டு போரினால் துண்டு துண்டாக சிதறி இருந்த அமெரிக்காவை ஒற்றுமைப்படுத்தினார். அதனால் அமெரிக்காவின் தந்தை என்று போற்றப்பட்டார் ஆப்ரகாம் லிங்கன்.

யாரிடமும் காழ்ப்புணர்ச்சி கொள்ளக்கூடாது. எல்லோரிடமும் அன்பு காட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தி வாழ்ந்த ஆபிரிகாம்லிங்கனை ஜான் வில்கிஸ் புத் என்ற நடிகன் சுட்டுக் கொன்றான். பதவியில் இருந்தபோது கொலை செய்யப்பட்ட முதல் ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன்.



## மகளிர் பக்கம்




இப்பகுதி மகளிருக்கானது. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி: பூங்கதிர், இல:19 மேல்மாடி வீதி, மட்டக்களப்பு.

- ஆசிரியர்


# பசிப்பிணி தீர்த்த பாவை

தமிழ் இலக்கிய வரலாற்றில் வயிற்றுப் பசி தீர்க்க வழிதேடிய ஒரே ஒரு காப்பிய நாயகி மணிமேகலை. அவள் கையில் தாங்கி இருந்தது வற்றாது உணவு வழங்கும் அமுதசுரபி. அறமெனப் படுவது யாது - மணிமேகலையை நாயகியாகக் கொண்ட காப்பியம் பதில் சொல்கிறது.

**"மறவாது கேள் மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும், உடையும் உறையுளும் அல்லது கண்டில்"**

மண்ணில் வாழும் உயிர்களுக்கு முதலில் தேவைப்படுவது உண்டி. ஆதிகாலத்தில் ஒரு பெண்ணை உருவகப்படுத்த பாரிய வயிறை வரைந்தனர் - பிள்ளை பெறுவது என்பதோடு பிள்ளையின் வயிற்றுப் பசியையும் போக்குபவள் பெண் என்று கருத்தில்தான் பெண்ணின் வயிற்றுக்கு அன்று முக்கியத்துவம் கொடுத்திருப்பார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. குழுந்தை பிறக்கிறது உடனே அழுகிறது. அதன் முதல் தேவையான காற்று உள்வாங்கப்பட்டதும், பால் குடிக்க அழுகிறது. குழந்தையின் பசியறிந்து பாலூட்டுவாள் தாய். மணிமேகலை என்ற ஆபரணம் வயிறை அலங்கரிக்கும் ஆபரணம். அந்தப் பெயரைச் சூடியவள் அற்றாரின் அழிபசி தீர்க்க முற்பட்டாள். ஆபுத்திரன் மணிமேகலைக்கு அமுதசுரபி கொடுத்தான். ஆதிரை இட்ட

உணவால் அது நிறைந்தது.



மணிமேகலை ஒரு சிறந்த சமூக சேவகி. அவள் பல தொண்டுகள் செய்து இப்பட்டம் பெறவில்லை. பூம்புகாரிலும், வஞ்சி மாநகர், காஞ்சி நகர் என்று எல்லா இடங்களிலும் கையில் அமுத சுரபி ஏந்தி அலைந்து திரிந்து பசிப்பிணி தீர்த்தாள் - அதுதான் அவள் செய்த சமூக சேவை. இவ்வாறு பசி தீர்க்க அவள் முற்பட்டதற்கு முதற் காரணம் அவள் அன்பே வடிவாக இருந்ததுதான். இந்த அன்பு அவளை உதவி கோருபவர்களைத் தேடி ஓடச் செய்கிறது. இளமை மாறும், உடம்பு சுருங்கும். எப்பொழுதும் நிலைப்பது அறம். அன்பென்னும் அறம் என்ற உணர்வுடன் வாழ்ந்தவள் மணிமேகலை. கோலவன் கண்ணகிக்காக அவள் கண்ணீர் விட்டு அழுதாள். பத்தினி கோட்டத்திற்குச் சென்று கண்ணகி கோவலன் படிமங்களை தொழுகிறாள். மதுரையை எரிக்க எப்படி அம்மா மனம் வந்தது என்று கண்ணகியிடம் கேள்விக்கணை தொடுக்கிறாள். அம்மா உன் அன்பு ஏன் வற்றியது என்றும் கேட்கிறாள்.



அதற்கு கண்ணகி சினத்தால் அச் செயலைச் செய்ததாகவும், முற்பிறவிப்பயன் என்று ஆறுதல் கூறப்படினும் மதுரையை எரித்த பாவம் தன்னை விடாது என்று கூறியதாகவும் காப்பியத்தில் எமக்குப் பதில் கிடைக்கிறது.

இந்தச் சம்பவத்துக்கு மாறாக மணிமேகலை அன்பின் இலக்கியமாக வாழ்ந்திருக்கிறாள். அவளுக்கும் கடும் சோதனை வந்தது. முற்பிறப்பில் கணவனாக இருந்த அரசகுமாரன் அவள் கண்முன் வெட்டுண்டு இறந்ததைக் கண்டும் அரண்மனையில் அவளைக் கொல்லச் சதி செய்யப்பட்டது பற்றி அறிந்தும் மணிமேகலை சினம் கொள்ளவில்லை. அதனைப்பிறர் மீது காண்பிக்கவும் இல்லை. மணிமேகலை கண்ணை மூடிக்கொண்டு ஒரு கோட்பாட்டைக் கடைப்பிடிக்கவில்லை. இந்திர விழாவுக்கு அவள் சென்று பல்வேறு சமய வாதிகளையும் கண்டு அவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள முற்பட்டாள். பல்வேறு சமயக் கருத்துக்களைக் கேட்ட போதிலும் பசித்தவர்க்கு உணவளிக்கும் பணியே சிறந்த பணி என்ற முடிவுக்கு வருகிறாள். பசி போக்கும் தொண்டில் அவள் சாதி சமய வேறுபாட்டைக் கடைப்பிடிக்கவில்லை. பசிக்கு எங்கே சாதிமத பேதம்? பெண்மையை முதன்மைப்படுத்தும் அறப்பணியை அவள் கடைப்பிடித்தாள். அன்ன பூரணியாக அமுத சுரபி ஏந்தி வருந்தி வந்தோரின் அரும்பசி போக்கினாள். பிணிகளின் ஆணிவேர் பசி. பசி நீக்கினால் பிணியும் பகையும் நீங்கும். இதுவே அவளது தாரக மந்திரம்.

பற்றற்ற துறவிக்கும் பசி வரும். அதனைத் தீர்க்க அவனும் முற்படுவான். இதனாலன்றோ மணிமேகலை வணங்கிய புத்திரபிரானும் அவரது சீடர்களான பிக்குகளும் கூட பிச்சாபாத்திரமாக ஓடு ஏந்தி வீடு வீடாகச் சென்று உணவை யாசகமாகப் பெற்றனர். இவர்களோடு ஒப்பிடுகையில் மணிமேகலை மிக உன்னத நிலையில் இருந்தாள் என்று தயங்காமல் கூறலாம். அவள் பிச்சா பாத்திரம் ஏந்தவில்லை. அட்சயபாத்திரமாக அமுதசுரபியை ஏந்தி பிறருக்கு உணவளித்தாள். இதனால் பசிப்பிணி தீர்த்த பாவையாகி மணிமேகலைக்கு பெண்ணுலகில் மிக உயர்ந்த இடமுண்டு. ■

**- சற்சொரூபவதி நாதன் -**

# பெண்ணடிமையே
# சமுதாய வீழ்ச்சியின் முதற்படி

- பத்மா சோமகாந்தன்

விஞ்ஞான தொழில்நுட்பத்திறன்களில் இன்றைய உலகம் பல சிகரங்களைத் தொட்டு வானத்தை முட்டும் நிலையில் இருக்கிறோம் எனப் பெருமையோடு பிதற்றிக் கொண்டாலும், நம் சமூகத்தின் அன்றாட வாழ்வில் பல சோகங்கள் அதிருப்திகள், அசமத்துவங்கள், மூட நம்பிக்கைகள், முரண்பாடுகள் போதாமைகள் என பல குறைபாடுகள் மண்டிக்கிடக்கின்றன. தனிப்பட்ட மனிதன், ஒருமித்த குடும்பம் நிம்தியாக மகிழ்ச்சியாக வாழ வழியுண்டா என்ற கேள்விக்கு பெரும்பாலும் இல்லையென்பதே விடையாகின்றது. இதற்கான காரணிகளாக கல்வியின்மை , போதிய வளமும் செல்வமுமின்மை, போதிய நிலமின்மை, மக்களின் திறமைக்குறைவு எனப்பலவற்றை நாம் சுட்டிக்காட்டினாலும் இவற்றையும் மீறிய மக்களின் அடிப்படை உரிமையின்மை என்பதையும் ஒரு முக்கிய காரணியாக இனங்காணவேண்டும்.

நாட்டு விடுதலைக்காக வேட்கையுறும்போது கடமையும் உரிமையும் சமத்துவமும் எத்தனை முக்கியமோ அதே ரீதியில் பெண்பற்றிய சமத்துவமும் பேணப்பட வேண்டும். இதனை வற்புறுத்தியே புரட்சிக் கவிஞன் பாரதி

"கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்களறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடுங் காணீர்"

என்று பெண் அறிவை வளர்ப்பதற்காக கல்வியை வற்புறுத்திப் பாடினான். சமுதாயத்தில் ஆண், பெண் சமத்துவம் பேணப்படாதாயின் அச்சமூகம் தாழ்நிலையில் கிடந்து பல சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிடுமன்றோ? பெண் உயிருள்ள ஒரு பிராணியாக அடுப்படியில அடைந்து கிடப்பதும், பிள்ளைகள் பெறுவதற்குயேயான மனுஷியாக மட்டும் தொழிற்படாமல் அறிவு நிரம்பியவளாக சகல வழிகளிலும் சமுதாய மேம்பாட்டிற்கு பெரிதும் உதவுபவளாக அமைந்திருப்பின் இச் சமூகம் ஏன் தலை நிமிர்ந்து நடைபோடாது.

எமது சமுதாயம் பல கல்விமான்கள், வீரர்கள், தியாகிகள், நாட்டுப்பற்றாளர், அநுபவசாலிகள், பெரியவர்கள், சமூகவியலா



வர்கள் எனப் பலராலுமே வடிமைக்கப்பட்டது. அக்காலத்தில் இவற்றில் ஈடுபட்டிருந்தவர்கள் ஆண்களே. அவர்கள் பெண் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும். இப்படித்தான் வாழவேண்டும், இப்படித்தான் ஒழுகவேண்டும் கற்பொழுக்கம், அடக்கம், பொறுமை, தியாகம், பேசாமை என்பனவேதான் பெண் என்று காலங்காலமாக வடிமைத்து வைத்ததோடு பழகியும் ஊடாடியும் வந்துள்ளனர். பெண்ணென்றால் பராமரித்து பாதுகாத்து பேணி உணவூட்டும் தாயாகவும், குழந்தைகளையின்று மனிதச் சங்கிலியைத் தொடரும் மனைவியாகவுமே பிரதானப்படுத்திச் சமுதாயத்தை நகர்த்தினர். இவை காரணமாக பெண் பெண்ணாக மட்டுமே சமைக்கவும், குழந்தையைப் பெற்றெடுக்கவுமே உரியவள் என்ற நிலைப்பாட்டைச் சமுதாயம் இறுகப்பற்றிக் கொண்டது. இவற்றை வீட்டிற்குள் அடைந்து கிடந்தபடியே பெண் சாதித்து முடிக்கலாம். படிதாண்டினாலே பத்தினித்தனம் கெட்டு ஒழுக்கம் சீரழிந்துவிடுமென்றெல்லாம் கதை சோடித்துவைத்தது.

சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின் பெண்ணை அவளது உடலமைப்பைச் சாட்டி மெல்லியலாள், கொழுகொம்புதேடும் கொடி, அழகுசுந்தரி என உயர்த்தியும் பலவீனப்படுத்தியும் சார்புடையவளாக வருணித்து அடக்கியும் ஒடுக்கியும் வைத்தது. நாணமும் அச்சமும் அவளது அணிகளாக்கின.

இந்நிலையில்தான் சில சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள், முற்போக்கு எண்ணங்கொண்டோர் பெண் விடுதலையையும் பெண் கல்வியையும் வற்புறுத்தினர்.

"நாணும் அச்சமும் நாய்கட்டு வேண்டுமாம்
ஞானநல்லறம் வீர சுதந்திரம்
பேணுநற்குடிப் பெண்ணின் குணங்களாம்"

என்று வீர முழக்கமிட்டவன் பாரதி.

திரு.வி.க, மகாத்மா காந்தி, சுப்பிரமணிய பாரதியார், லாலா லஜபதிராய் போன்ற சமூகசிந்தனையாளர்களே பல எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் சமுதாயத்தில் பெண்ணின் நிலை பள்ளத்துள் வீழ்ந்தும் குருடனைப்போன்ற ஸ்திரதியிலிருந்து அவர்களை உண்மை ஒளிபெற்றவர்களாக மேல்நிலைக்கு உயர்த்திவிடவேண்டுமென்ற ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் தொழிற்பட்டனர். இப்பணியில் பல கற்றோர்களும் சமூக நலன்விரும்பிகளும் இணைந்துகொள்ள பெண் சமூகத்திற்குக் கல்விச்சாலைகள் திறந்துவிடப்பட்டன.

ஆண்டாண்டுகாலமாக அடக்கப்பட்டு வாழ்ந்த பெண் கல்விகற்கத் தொடங்கினாலும் பழமையில் ஊறிய எச்சங்கள் இலகுவில் அவளைவிட்டு விலகி விடுமென நாம் பெரிதும் எதிர்பார்க்க முடியாதே. இவற்றையும் மனதிலிருத்திய பாரதி 'புதுமைப்பெண்ணை' அறிமுகம் செய்தான். கல்விகற்றபெண்

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மைமாதர் திறம்புவதில்லையாம்" என்ற சிறப்புகளோடு மிளிரவேண்டுமென வழிகாட்டினான்.

ஒரு ஆண் கல்வி கற்பது அவனுடைய அறிவை விருத்திசெய்வதற்கேயுதவும் வேளையிலே ஒரு பெண் கல்விகற்பது அவளது இரத்தமும் சதையுமான குழந்தைகள் அறிவை வளர்க்கவும் விரிவடையவும் தூண்டுவதால் ஒரு சமுதாயமே கல்வி கற்பதற்குச் சமானமாகும் என்ற கருத்தும் நம் மத்தியில் நிலவுகின்றது. பெண்கல்வியால் நாடு பீடும் பெருமையும் அடையும் என்ற குறிக்கோளைக் கொண்டு பெண்களுக்குக் கல்வி கொடுக்கப்பட்டதால் பெண்கள் பல்வேறுதுறைகளில் தமது திறமையை, ஆற்றலை ஆளுமையைப் பதிவு செய்துள்ளனர். விஞ்ஞானத் தொழில்நுட்பத் துறையில் கூட கல்பனா சாவ்லா, செல்வி வில்லியம்ஸ் போன்றோர் விண்வெளிப் பயணத்திலும் ஆணுக்குச் சமனாக உலாவந்து பெண்ணின் பெருமைக்கு மகிமை ஏற்படுத்தியுள்ளனர். பல்லாண்டுகளுக்கு முன் மடம் கியூரி நொபல் பரிசுபெற்ற பெண்மணி, சேவையில் திரேசா அம்மையார் இவரும் தன் சிந்தனையால் நொபல் பரிசைப் பெற்றுக்கொண்டவர். கெலன் ஹெல்லர் போன்ற பல பெண்கள் வெவ்வேறுதுறைகளில் ஒளிவிட்டுப் பிரகாசித்தள்ளனர்.

பாரத நாட்டிலும் கூட நீலாம்பிகை அம்மையார், ஸ்ரீ இராமகிருஷ்ண சாராத தேவியார், டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி, தில்லையாடிவள்ளியம்மை, சரோஜினி நாயுடு, கஸ்தூரிபாய், காந்தி மீனாட்சி அம்மாள், மங்களாம்பாள் எனப்பல புகழ் பெற்ற பெண்மணிகள் தமது சாதனைகள் மூலம் இன்றும் எடுத்துக்காட்டாகப் பேசப்பட்டும் போற்றப்பட்டும் வருகின்றனர்.

எனினும் இவர்களது சாதனைகள் பிரமிப்பூட்டக் கூடிய வகையில் அமைந்திருந்தபோதிலும் இத்தகைய பெண்களது எண்ணிக்கை ஆண் மக்களோடு அல்லது சனத்தொகை விகிதத்தைக் கணக்கிடும்போது மிகக்குறைந்த தொகையினரே என நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதற்கான காரணத்தை நாம் பெரிதாக நுணுகிநுணுகி நுட்பமாகத் தேடி ஆராயவேண்டிய அவசியமேயில்லை. இரண்டு கால்களால் நடைபோடுபவனது கால்கள் இரண்டும் சமமான அளவாகச் சமமாகவேயிருந்தால்தான் அந்நடை செப்பமாக அமையும். ஒரு கால் சமமான அளவின்றிக் கட்டையாகவோ, நோயுற்றோ, பாதிக்கப்பட்டோ இருக்குமாயின் நடக்கும் போது சமனற்ற தன்மையை, வேகக்குறைவை இழுபாட்டை நாம் அவதானிக்கலாம். இதுவே நம் சமுதாய வளர்ச்சிக்கும் ஆகும். ஆணைவிட பெண்ணினம் இதுவரைகாலமும் பின்தங்கியே இருக்கக்கூடியதாக நமது மரபும் கலாசாரமும் சமூக வடிவமைப்பும் வனையப்பட்டிருந்தமையே இதற்கான முக்கிய ஏதுக்களாகும். இவற்றைக் கற்றவர்கள் சமூகச் சிந்தனையாளர்கள், முற்போக்குவாதிகள், புரட்சிவேண்டுவோர் மனதில் இருத்தி தக்கமாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் உழைக்கத் துணிவதே எம்முன் உள்ள பாரிய கடமையாகும்.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம்"

என்ற பாரதியின் வாக்கை வேதவாக்காக ஏற்றுப் பெண்ணடிமைப் பேயை ஓடஓட விரட்டும்வோம். சமுதாய உயர்ச்சிக்காக ஆணும் பெண்ணும் கைகோர்த்து ஒன்றுபட்டு உழைப்போம். பெண் உரிமை பெண் சமத்துவம் பேணுவோம். சமுதாய வளர்ச்சியின் உச்சத்தை நோக்கி ஆண்பெண் சமத்துவமாக ஏறுநடைபோடுவோம்.

# மருதாணி

தமிழர்பண்பாட்டில் மருதாணி பண்டைக்காலந்தொட்டே பாவனையிலிருந்து வருகிறது. பெண்கள் அழகுக்காக மருதாணி இலையை அரைத்து தங்கள் நகங்கள், உள்ளங்கை, பாதம் இவற்றில் பூசிக் கொள்வார்கள். இந்த மருதாணியை சில உடல்நோய்களைக் குணமாக்கவும் பாவிக்கலாம். கோடை காலத்தில் வாரத்துக்கொருமுறை மருதாணி இலையை அரைத்து உள்ளங்கால்கள், உள்ளங்கைகளுக்குப் பூசி வந்தால் சூடு தணிந்து உடலுக்குக் குளிர்ச்சி தரும். தோலுக்கும் நல்லது. தலைமுடியைப் பளபளப்பாக்கும். எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் நாட்களில் மருதாணி இலையை ஊறவைத்து அரைத்துப் பூசிக் குளித்து வந்தால் தலைமயிர் கறுப்பாக வளரும். தலைமுடி உதிர்வதைத் தடுக்கவேண்டுமானால் மருதாணியிலை, கறிவேப்பிலை, செம்பருத்தியிலை மூன்றையும் நீர்விட்டு அரைத்து வடகம்போல் தட்டி வெளியில் காயவைத்தெடுத்து, பின்னர் அதை தேங்காயெண்ணையில் ஊற வைத்து அந்த எண்ணையை அடிக்கடி வெயிலில் காயவைத்து எடுத்துக்கொள்ளவும். அந்த எண்ணையைத் தினமும் தலையில் தடவிவந்தால் தலைமுடி கொட்டுவது நீங்கும். பேன், ஈர், பொடுகுத் தொல்லையும் தீர்ந்துபோகும்.

விரல் இடுக்குகளிலுள்ள புண், காலில் பித்தவெடிப்பு, நகங்களில் வெடிப்பு போன்ற வியாதிகளுக்கு மருதாணியிலையை அரைத்துப் பூசிவர அவை குணமாகும்.

- செந்து

தமிழகத்தில் இன்று பரபரப்பாகப் பேசப்படும் கவிஞர் திலகபாமா ஆறு கவிதை நூல்களுக்கும் 'சூரியாள் கதைகள்' எனும் நீள்கவிதை நூலுக்கும் ஒரு சிறுகதைத் தொகுதிக்கும் சொந்தமானவர். பாரதி இலக்கிய சங்கத்தின் செயலாளரான இவர் இணைய இதழ்களிலும் தொடர்ந்து எழுதிவருவதோடு ஆணாதிக்கத்தை நீர்க்கச் செய்யும் ஒரு பெண்ணியச் செயற்பாட்டாளருமாவார். இவருடைய கவிதையும் எமது கதிருக்கு ஒளி ஊட்டுகின்றது.

-ஆசிரியர்

# எச்சில்கள் பட்டாக


கனிபறித்து தரச்
சொல்லிக் கேட்கும்
கயமையிலிருந்து
உருகி வழிகிறது காதல்
உயிர்த்தீயை சுடராய் ஏந்தியபடிக்கு

சமைத்து போடும் நான்
செலவழிப்பது உன் உழைப்பென்று
சொல்லப்படும் தருணத்தில்
எச்சில் இலைகளுக்குள்
சிறைப்படுகின்றேன்
வண்ணங்கள் ஏந்தி
சிறகு விரியுமுன்
வெந்நீரில் நனைகிறது
கூடுகளென சொல்லப்பட்ட
எச்சில்கள்

சுழற்சியில் பிரியாகி, திரியாகி
இழையாகி துணியாகி
தொலைந்தவளின்
சூக்கும நிர்வாணத்தை
மின்னும் பொற்சரிகையாக்கி
மூடிக்கொள்கின்றன

- திலகபாமா





# இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகள்

## -சில குறிப்புக்கள்

ஜின்னா ஷரிபுத்தீன்

சைவ, சமண, கிறிஸ்த்தவ, பௌத்த மதசார் இலக்கியங்கள் தமிழிலக்கியத்திற்கு அணிசேர்த்தது போன்றே இஸ்லாம் மதசார் இலக்கியங்களும் தமிழுக்கு அழகு சேர்த்துள்ளன. உமறுப்புலவரின் சீறாப்புராணமும், மஸ்த்தான் சாகிபின் பாடல்கள் மட்டுமே நீண்டகாலமாக தமிழுலகு அறியப்பட்ட இஸ்லாமிய இலக்கியங்களாக இருந்தன. பல்வேறு காரணங்களால் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்தப்படாமல் இருப்பது கண்டு இஸ்லாமியத் தமிழ் அறிஞர்கள் அவற்றை வெளிக் கொணரும் அவசியத்துக குள்ளாயினர்.

இதன் காரணமாய் இலங்கையின் பேராசிரியர் டாக்டர். எம்.எம். உவைஸ் அவர்களின் இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள் தமிழுலகுக்கு அறிமுகமாயின. இம்முயற்சியில் பன்னூலாசிரியர் ஏ.அர்.எம்.அப்துல் றகுமான் பங்களிப்பும் கணிசமானதாகும்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதோடு, கண்டறியப்பட்ட இலக்கியங்களை உலகறியச் செய்யும்நோக்கமாகவும் இஸ்லாமியத்தமிழ் இலக்கிய மாநாடுகள் உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்டு வருகின்றன.

இஸ்லாமிய இலக்கிய ஆய்வுகளின் தோற்றுவாய் நமது மண்ணாகும். 1966ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் மருதமுனை கிராமத்தில் நடைபெற்ற நபி ஜின்னா விழாவில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் இஸ்லாமிய இஸ்லாமியரல்லாத சகோதர மதத்தவர் அறிஞர்களால் ஆய்வு

செய்யப் பெற்று கட்டுரைகளாச் சமர்ப்பிக்கப்பட்டன. இவை பின்னர் நாலுருப் பெற்றது. இவ்விழாவில் பதின் ஏழு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அனைத்தும் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வுகளே.

இவ்விழா இன்றைய அல் மனார் வித்தியாலயத்தில் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள் தலைமை ஆசானாக இருந்த பொழுது ஆசிரியர் செய்யது ஹசன் மௌலானா அவர்களின் அயரா முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்டது என்பது வரலாறு.

அன்று ஏற்றப்பெற்ற ஆய்வுச்சுடர் விசாலித்து 1973ம் ஆண்டில் திருச்சியில் ஒரு உலக அளவிலான இஸ்லாமியத் தமிழ் இலக்கியமாநாட்டை நடத்தக் காரணமாயிற்று.

1973ம் ஆண்டில் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில், இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வாதிகளையும், கல்விமான்களையும், ஆர்வலர்களையும், ஒருங்கிணைத்து இஸ்லாமிய இலக்கியக் கழகம் எனுமோர் அமைப்பு உருவாக்கப்பட்டது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட கழகம் இந்தியாவிலும், இலங்கையிலுமாக இதுவரை ஏழு மாநாடுகளை நடாத்தியுள்ளது. தவிரவும் புதுக்கோட்டையில் இஸ்லாமிய சிற்றிலக்கிய மாநாடொன்றையும் இக்கழகம் நடத்தியது.

மேலும் இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகம் என்னும் பிறிதோர் அமைப்பு தமிழகத்தில் பிராந்திய ரீதியாக இதுவரை வருடா வருடம் பதின்மூன்று மாநாடுகளையும் நடத்தியுள்ளது. மட்டுமன்றி இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் அனுசரணையுடன் இலங்கை துறைமுகங்கள் அபிவிருத்தி கப்பற்றுறை அமைச்சு அரசாங்க நிதியுதவியுடன் 2002ஆம் ஆண்டு இலங்கையில் ஒரு இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டை நடத்தியது.

இம்மாநாடுகள் அனைத்திலும் பழைய இஸ்லாமிய இலக்கியங்கள் மீள் பதிப்புச் செய்யப்பட்டதுடன் நவீன இலக்கியங்களும் வெளியிடப்பெற்று இலவசமாகவும் விநியோகிக்கப்பட்டன.

தவிரவும் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்புக்களும், சிறப்பு மலர்களும் வெளியிடப்பட்டன. இவ்வாய்வுகள் இஸ்லாமியத் தமிழ் அறிஞர்களால் மட்டுமன்றி, இதர சகோதர சமூகங்களைச் சார்ந்த தமிழறிஞர்களாலும் எழுதப்பட்டவைகளாகும்.

ஒவ்வொரு மாநாட்டிலும் இஸ்லாமியத் தமிழுக்குத் தொண்டாற்றிய முஸ்லிம், முஸ்லிம் அல்லாத அறிஞர்கள் பொற்கிழி வழங்கியும், பொன்னாடை போர்த்து நினைவுச் சின்னங்கள் அளித்தும் கௌரவிக்கப்பட்டுள்ளனர். சமூக நல்லிணக்கத்துக்கு இதுவோர் எடுத்துக் காட்டாகும்.

மாநாடுகளில் ஆய்வரங்கு, கவியரங்கு போன்ற நிகழ்வுகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.



இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகத்தின் முதலாவது மாநாடு 1973ம் ஆண்டு மே மாதம் 12ம் 13ம் தேதிகளில் திருச்சியில் நடைபெற்றது. இம்மாநாட்டில் அன்றைய இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் இரண்டாயிரத்துக்கும் அதிகமான இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை உருவாக்கியுள்ளனர் என்பதை நிரூபணம் செய்யுமாறு ஒரு நூல் அரும்பொருட்காட்சி நடத்தப்பெற்றது. இதுவோர் சரித்திர நிகழ்வாகும். இந்நூல்கள் மீள் பதிப்புக்கள் பல கண்டு வரவேற்புப் பெற்றன. ஆய்வுகள் செய்யப்பட்டன. முதலாம் மாநாட்டில் பேரறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதம் பங்கு கொண்டு சிறப்பித்தார்.

இரண்டாம் மாநாடு சென்னை புதுக் கல்லூரி வளாகத்தில் 1974ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8ம் 9ம் தேதிகளில நடைபெற்றது.

"இஸ்லாம் எங்கள் வழி இன்பத்தமிழ் எங்கள் மொழி" எனும் முழக்கம் இம் மாநாட்டு மேடையிலேயே அறிமுகம் செய்யப்பட்டது.

இம்மாநாட்டில் பிரதம அதிதியாகப் பங்கு கொண்ட தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வுத்துறைக்கு முதற்கட்ட நிதியாய் ரூபா பத்தாயிரம் ஒதுக்கீடு செய்வதாக அறிவித்தார்.

தவிரவும் இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கையெழுத்துப் பிரதிகளைத் தேடி ஆய்வு செய்து நூலுருப் பெறச் செய்ய இந்தியப் பல்கலைக்கழக மானியக் குழு ரூபா பதினைந்தாயிரத்தை திருச்சி ஜமால் கல்லூரிக்கு வழங்கியது.

1978ம் ஆண்டு ஜனவரி மாதம் 13,14,15ம் தேதிகளில் காயல்பட்டினத்தில் கழகத்தின் மூன்றாவது மநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் பெருந்தொகையிலான வெளிநாட்டுப் பேராளர்கள் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் கலந்துகொண்ட தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகம் அவர்கள் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வுத்துறையை வளம் பெறச் செய்ய ரூபா இரண்டு இலட்சம் ஒதுக்கீடு செய்தார். இதன் பயனாய் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் இலங்கைப் பேராசிரியர் டாக்டர் ம.மு.உவைஸ் அவர்களின் தலைமையில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துறை ஆரம்பிக்கப்பட்டது.

1979ம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நான்காம் மாநாடு நடத்தப் பெற்றது.

மாநாட்டை இலங்கை ஜனாதிபதி அதிமேதகு ஜெ.ஆர். ஜெயவர்த்தனா தொடக்கி வைக்க பிரதமர் ரணசிங்க பிரேமதாச அவர்கள் நிறைவுப் பேருரை செய்து முடித்து வைத்தார்.

1990ம் ஆண்டில் ஐந்தாம் மாநாடு

ஜனவரி மாதம் 29, 30, 31ம் தேதிகளில் தமிழ்நாடு கீழக்கரையில் நடத்தப்பெற்றது.

இம்மாநாட்டில் வழமையான வற்றோடு, மகளிர் அரங்கும், மார்க்க அறிஞர் அரங்கும் ஆய்வரங்குகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

ஆறாம் மாநாடு சென்னை கலைவாணர் அரங்கில் 1990ம் ஆண்டு நடத்தப்பட்டது இலங்கையில் இருந்து சுமார் முப்பத்தைந்து பேராளர்கள் பங்கு கொண்ட இவ்விழாவில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வின் ஆரம்ப கர்த்தா செய்யதுஹஸன் மௌலானா தமிழக முதல்வரால் கௌரவிக்கப்பட்டு ரூபா பத்தாயிரம் பொற்கிழியாகவும் பெற்றார்.

இம்மாட்டின் போதுதான் அதில் கலந்து கொண்ட இலங்கை பேராளர்கள் சிலரால் இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் உருவாக்கப்பட்டது.

இலக்கியக் கழகத்தின் ஏழாம் மாநாடு 2007 மே மாதம் சென்னையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி பிரதம அதிதியாகப் பங்குகொண்டு சிறப்பித்தார்.

கலைஞர் அவர்களுக்கு கழகம் உமறுப்புலவர் விருதளித்து ரூபா ஒரு இலட்சம் பொற்கிழியும் வழங்கிக் கௌரவித்தது. இம் மாநாட்டில் இலங்கையைச் சேர்ந்த சுமார் நூற்று இருபது பேராளர்கள் பங்கு கொண்டனர்.

2002ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22, 23, 24ம் தேதிகளில் இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவியுடன் பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு நடைபெற்றது. இது மற்ற எந்த அமைப்புகளின் தொடர்புமற்றதனித்துவமான ஒரு மாநாடாகும்.

இம்மாநாட்டில் இலங்கையின் மூத்த படைப்பாளிகளோடு, இளந்தலை முறையினரும் கௌர விக்கப்பட்டனர். சிலருக்குப் பொற் கிழியும் வழங்கப்பட்டது.


இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், அமீரகம் ஆகிய நாடுகளின் பேராளர்கள் நூற்றுக்கதிகமாய் இம்மாநாட்டில் பங்கு கொண்டனர். இயல், இசை, நாடகம், ஆகிய முத்தமிழுக்கும் விழாவெடுத்த ஒரே மாநாடு இதுவென்னும் பெரும் இம்மாநாட்டுக்கு உண்டு.

இம்மாநாட்டில் அன்றைய இலங்கைப் பிரதமர் மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்கவுடன், இன்னும் பல அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

இம்மாநாட்டினை இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய் வகத்தின் அனுசரணையுடன் இலங்கை துறைமுகங்கள் அபிவிருத்தி கப்பல்துறை அமைச்சின் அன்றைய அமைச்சர் மாண்புமிகு றவூப் ஹக்கீம் தலைமை ஏற்று நடத்தினார்.



# தடை......?



உனக்கு மடலெழுத நினைக்கையில்
காகிதமே கரைகிறது கண்ணீரில்!

சாலையில் என் கால்
தடக்குகையில் ஓடிவந்து
கைப்பிடிக்க உன்கை
வராத சோகம்!

வேலையில் களைத்து
வீடுவந்து சேர்க்கையில்
சூடாய் ஓர்தேநீர்
உன்கை தராதசோகம்!

என் உலகம் முழுவதுமாய்
நீதான் வருகிறாய்!
நிஜஉலகில் அல்ல -
நினைவுலகில் மட்டுமே!

பண்டிகைகள் வந்துபோகின்றன - உன்
பட்சணங்கள் இல்லாது!
காலங்கள் கடந்து போகின்றன - உன்
அருகாமை இல்லாது!
தடைகள் மலைகளாகின்றன - உன்
நம்பிக்கை உரமில்லாது!
இரவுகள் கரைந்து போகின்றன - உன்
நினைவுகளின் சுமையோடு!
எதிர்பார்ப்புகள் மட்டுமே எஞ்சி
நிற்கின்றன கனவுகளாய்!

உன் மழைக்குரல் கேட்க
பல வருடம் பாலையில்
தவமிருந்தே காய்ந்த புல்லாய்நான்!

அம்மா எனும் வார்த்தைக்குள்
அன்பைக் குழைத்தவளே!
கல்லாயிருந்த என்னை
சிற்பமாய்ச் சமைத்தவளே!
என் நினைவுகளில் நீக்கமற நிற்பவளே!
என்னையும் உன்னையும்
பிரித்து வைத்த A-9 தடை
தகர்வது எப்போது......,

-அஞ்சனா-

# வாழ்வே கவிதையாய்....

-எஸ். எழில் வேந்தன்

தூறுகின்ற மழைத்துளியின் தூய்மைமிக்க தொண்டாலே துயரம் நீங்க
சேறுவற்றி வெடித்த நிலம் செழுமையுற்று நிதிவிளைக்க செய்வ தொப்ப
நாறுகின்ற குட்டைமன நல்லவர்கள் நகைத்தாலும் நலியேன் நெஞ்சில்
ஊறுகின்ற கவித்துளிகள் ஒவ்வொன்றும் தமிழ்வளர்க்கும் உண்மை உண்மை!

பஞ்சமெனும் கொடுநோயன் பல்லிடுக்கில் பட்டுழன்று பசுமை நீங்கி
கொஞ்சுமொழி மனையாளும் குதலைமொழி மைந்தர்கள் குமுறி ஏங்கி
நெஞ்சுதனில் நெருப்பூற்றி நெடும்பயணம் சென்றீரோ எனத்து டித்தால்
அஞ்சாதீர் துணையாக அழகுதமிழ் கவியுண்டென்(று) ஆற்றிச் செல்வேன்

இயற்கைஎழில் மதுவருந்தி இனிக்குமந்த போதையிலே இறும்பூ தெய்தி
மயக்குதமிழ் மங்கைதரும் மதனசுகம் பெறஅவளை மருவி வையம்
நயக்க இன்று மறுத்தாலும் நானிறந்த பின்பொருநாள் நன்று போற்றி
வியக்கவண்ணம் நறுங்கவிகள் விதவிதமாய் வடித்தவற்றை விட்டுச்செல்வேன்

ஈழத்தின் நவீன கவிதைப்போக்கின் பிதாமகர்கள் என வர்ணிக்கப்படுகின்ற மகாகவி, நீலாவணன், முருகையன் ஆகிய மூவருள் கிழக்கிலங்கை தந்த கவிஞர் நீலாவணனின் வெளிவராத கவிதைகளில் ஒன்று இது. 32 ஆண்டுகளுக்கு முன்னர் மரணித்துப் போன ஒரு கவிஞன், தன் கவிதை மீதும் கவியாற்றல் மீதும் வைத்திருந்த நம்பிக்கை இவ்வாறுதான் கவிதையாக வெளிப்பட்டது. அந்த நம்பிக்கை எத்துணை உறுதியானது என்பதை, இன்றும் அவரது கவிதைகள் சுவைஞர்களால் தேடி வாசிக்கப்படுவதிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. கவிஞர் நீலாவணன் மரணித்து 30 ஆண்டுகளின் பின்னர் வெளிவந்த "ஒத்திகை" எனும் கவிதைத் தொகுதியின் அச்சிட்ட 1000 பிரதிகளும் ஓராண்டு காலத்துள் விற்றுத் தீர்ந்தன என்பது, எனது இக்கருத்துக்கு மேலும் வலுச் சேர்க்கும் என்றே நம்புகிறேன். கவிஞர் நீலாவணனின் மகனாக அந்நூலை வெளியிட்டவன் என்ற வகையில் அவ்வனுபவத்தை நேரடியாகப் பெற்றவன் நான்.

நீலாவணனின் கவிதைகள் தொடர்பான ஆய்வுகள், கட்டுரைகள், வாதங்கள், பிரதிவாதங்கள் என, அவ்வப்போது சஞ்சிகைகள், மாசிகைகள், நாளிதழ்கள் என்பவற்றில் வெளிவந்த வண்ணமிருந்தாலும் நீலாவணன் படைப்புகள் இன்னும் சரியாக ஆய்வு செய்யப்படவில்லை என்பதே எனது தாழ்மையான கருத்தாகும். இதற்கான முழுப்பொறுப்பையும் நானும் எனது குடும்பத்தினரும் ஏற்றுக் கொள்ளவேண்டியுள்ளோம். அவரது படைப்புகள் அனைத்தும் ஒருசேர இன்னமும் வாசகனைச் சென்றடையவில்லை. அவற்றை முழுமையானதொரு தொகுப்பாக வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை நாம்



இன்னும் செய்யவில்லை. இந்தக்குறை நிவர்த்தி செய்யப்படும் வரை நீலாவணனின் படைப்புகள் தொடர்பான முழுமையானதொரு தரிசனம் எவருக்குமே கிடைக்காது போய்விடும்.

நீலாவணன் கவிதைகளைச் சுவைப்பவர்கள் அவற்றை ஏனைய கவிஞர்களின் கவிதையோடு ஒப்பு நோக்குவதும், சில காரணிகளை முன்வைத்து ஒருவரது கவிதைகளைவிட மற்றவருடைய கவிதை உயர்ந்தது அல்லது தாழ்ந்தது என்றோ அல்லது அத்தகைய ஒப்புநோக்குதலின் முடிவாக யாரேனும் ஒருவரே கவிதையின் சிகரம் என்றோ நிறுவ முன்வரும் அபத்தங்களையும் அண்மைக்காலங்களில் காணமுடிந்தது. ஒவ்வொரு படைப்பாளிக்கும் அவனது வாழ்க்கை முறை, சமூகப்பின்னணி, வாழும் பிரதேசம், சூழல், சூழ்நிலை, பொருளாதாரப் பின்னணி என்பவை அவனது படைப்புகளில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்தும் என்பதை இத்தகைய விமர்சகர்கள் மறந்துவிடுவது விசனத்துக்குரியதே. நீலாவணன் படைப்புகளைச் சுவைப்பதற்கு முன்னர், நீலாவணனின் இத்தகைய சமூக மற்றும் குடும்பப் பின்னணி பற்றித் தெரிந்திருத்தல் அவசியமென நான் நம்புகிறேன்.

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில், மட்டக்களப்பிலிருந்து 22 மைல் தொலைவில் அமைந்துள்ள பெரிய நீலாவணை என்னும் சிற்றூரே நீலாவணன் பிறந்து, வளர்ந்து, மரணித்த ஊர். ஊர்மக்களில் பெரும்பாலானோர் விவசாயிகள். நீலாவணனின் தாய் வழிப்பாட்டானார் பேவகனாராகவும் (பிஸ்கால்), சட்டம்பியராகவும் தொழில் பார்த்தவர். அவருக்கு சோதிடம், மருத்துவம், மந்திரம் என கைவந்த கலைகள் பல. அதனால் நீலாவணனின் தாயாருக்கும் இலக்கியம் தொடர்பான பரிச்சயமிருந்தது. 3 தம்பிமாரையும், 3 தங்கையரையும் கொண்ட நடுத்தரக் குடும்பத்தின் தலைச்சன் பிள்ளை, நீலாவணன் பயிற்றப்பட்ட ஆசிரியராக பணியாற்றியவர். இளமைக் காலத்தில் திராவிட இயக்கத்தின் தீவிர பக்தனாக இருந்து பின்னர் தமிழரசுக்கட்சி அபிமானியாக மாறியவர். சாதிக்கொடுமைகளை, தீண்டாமையை, சமூக அநீதிகளை, மூடநம்பிக்கைகளை எதிர்த்துக் குரல்கொடுத்ததோடு, இவற்றுக்கெதிரான நடவடிக்கைகளை இயக்க ரீதியாக மேற்கொண்டிருந்தவர். இளமைக்காலத்தில் நாத்திகப் போக்குடையவராக இருந்தாலும் பிற்காலத்தில் இறை நம்பிக்கை கொண்டவராக மாறியவர். உணவுப்பிரியர். நண்பர்களிடத்தில் அலாதி அன்புகொண்டவர். இலகுவில் உணர்ச்சிவசப்படுபவர். ஏழைகளிடத்தில் இரக்கமுள்ளவர். காதல் திருமணம் செய்து, 5 பிள்ளைகளின் தந்தையாக, 42 வயதில் மாரடைப்பால் மரணமானவர். இத்தகைய பதிவுகளோடு நீலாவணனின் படைப்புகளைத் தரிசிக்கும்போது அவற்றின் காத்திரத் தன்மையை உணர்ந்து கொள்ளமுடியும்.

அனுபவமும் பங்குபற்றலுமே ஒரு படைப்பின் அடிநாதம் என்பார்கள். நீலாவணன் தன் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பங்கள் பலவற்றை கவிதைகளாக வடித்து விட்டுச் சென்றிருக்கின்றார். அவை பிரசுரிக்க வேண்டியவையா? பிரசுரத்திற்குத் தகுதியானவையா? இல்லையா என்பதை அவர் எங்கும் குறிப்பிட்டுச் செல்லவில்லை. தன் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களை, தான் சந்தித்த நிகழ்வுகளை, மன உளைச்சல்களை கவிதைகளாக வடித்துள்ளார். வெறுமனே கவிஞன் என்ற பெயருக்காக வாழ்ந்து விட்டுச் செல்லாமல் கவிஞனாகவே கவிதையுடன் அவர் வாழ்ந்து மறைந்துள்ளார். இதுவரை வெளி உலகத்துக்குத் தெரியவராத அத்தகைய கவிதைகள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொடர்ச்சி ☞ பக்.56

# 'கோடை' நாடகம்

## – சில அவதானிப்புகள்



**சேயோன்**

கவிஞர் 'மஹாகவி' மறைந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டாலும் அவர் நம்மிடையே ஏற்படுத்திய கவிதா வீச்சு இன்றுவரை ஆழப்புதைந்து காணப்படுகின்றது. அவரது கவிதைகளுக்கான சமூக அங்கீகாரமும் பாலர் பாடநூலில் இருந்து பல்கலைக்கழகம் வரையிலான கல்விசார் அங்கீகாரமும் இன்றும் நிலைத்துள்ளது என்பதற்கு அவரது கவிதைகள் பற்றிய ஆய்வுகளும் அவரது கவிதைகள் பாடநூல்களில் இடம்பெறுகின்றமையும் அவரது கவிதைகளின் வீச்சுப் பற்றி பேசுவதும் அவரது ஏற்புடைமைகளின் வெளிப்பாடாகும்.

அவர் தமது கவிதைகளை பல்வேறு வடிவங்களூடாகவும் முன்வைத்தவர். கவிதை, காவியம், பாநாடகம் எனப்பலவாறு அவை விரியும். அவர் படிப்பதற்கும் நடிப்பதற்குமாக **'புதியதொரு வீடு' 'கோடை'** என இரு பாநாடகங்களை எழுதினார். 'புதியதொரு வீடு' கடற்தொழிலாளர்கள் பற்றியது. 'கோடை' இசைவேளாளர் பற்றியது. எனினும் இவை இரண்டிலும் மேலோங்கி நிற்பவை சமூக அக்கறையும், மனதாபிமானமுமேயாகும். 'கோடை' நாடகம் எழுதப்பட்டு மேடையேற்றத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது அது பலதரப்பு எதிர்ப்புக்களைச் சந்தித்தது. மேடையேற்றத்துக்கான தடையும் விதிக்கப்பட்டது. எனினும் அது காலங்களை வென்று பாடநூலாகவும், அரங்காற்றுகைக்குரிய பனுவலாகவும் நிலைபேறாக்கம் பெற்றது.

இந்தப் பீடிகைகளுடன் அண்மையில் 31.12.2007 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் மீண்டும் மேடையேற்றப்பட்ட 'கோடை' நாடகத்தின் மனப்பதிவுகள் சிலவற்றை பதிவு செய்தல் அவசியமானதாகும். கலைஞர் சோக்கல்லோ சண்முகத்தின் நெறியாள்கையில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது. சோக்கல்லோ பிரதான பாத்திரமேற்றும் நடித்திருந்தார். முதலில் சோக்கல்லோ சண்முகத்தின் முயற்சியினைப் பெரிதும் பாராட்ட வேண்டும். கலைஞர்களைத் தெரிவு செய்வதும் ஒருங்கிணைப்பதும் பாரிய பணி. சோக்கல்லோ இதனது ஒருங்கிணைப்பாளராக இருந்து அதனைச் செவ்வனே செய்துள்ளார். இது நாடக நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த பேராசிரியர் சபா ஜெயராசாவாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

உண்மையில் இந்த நாடகத்தின் இயங்கு காலம் காலனித்துவ ஆட்சிக்காலம். எனவே பார்வையாளருக்குச் சற்று அந்நியப்பட்ட ஒரு காலகட்டத்தினதும் சமூகத்தினதும் வாழ்க்கையையும் பின்புலங்களையும் அறிக்கை செய்கின்றோம் என்ற உணர்வு நாடகத் தயாரிப்பாளர்களுக்கு இருக்க வேண்டும். ஏனெனில் பார்வையாளர்களை நாடகத்தினின்றும் அந்நியப்படுத்த முடியாது. ஆகவே காலத்தையும் கருத்தையும் பார்வையாளர்களிடையே தொற்ற வைக்குமளவிற்கான ஆற்றுகைத் தன்மை நாடகத் தயாரிப்பாளர்களுக்கு இருப்பது அவசியம் ஆகும்.



இந்த நாடகத்தின் உள்ளார்ந்த பலம் அது மறைமுகமாகப் பல சேதிகளைச் சொல்வதாகும். 'கோடை' என்ற அதன் பெயரே அதனது சங்கேதத் தன்மையை வெளிப்படுத்துவது. **'இதுவோ கடுங்கோடை வெயிலினால் அல்ல'** என்ற மஹாகவியின் வார்த்தைகள் வெறும் வார்த்தைகள் அல்ல. இதுபோலவே - கணேசு, சோமு, பஞ்சையர் முதலிய பாத்திரக் கூற்றுக்கள் வாயிலாகப் பல சேதிகள் அந்நிய ஏகாதிபத்திய எதிர்ப்புக்குரல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாகப் புரிந்து கொண்டு அவற்றைப் சரியான காலப்பிரமாணத்துடன் உச்சரிக்கும் போதே அந்த வார்த்தைகள் அர்த்தம் சொல்லும் என்பதை நடிகர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அல்லாது போயின் அவை வெறும் வாய்ப்பாட்டுக்களை ஒப்புவிப்பது போலாகிவிடும்.


இவ்விடத்தில் சுட்டிக் காட்டப்பட வேண்டிய இன்னோர் விடயம், நாடகம் காலனித்துவ காலத்துக்குரியதாக இருந்தாலும், அதில் சுட்டிக் காட்டப்படுகின்ற, விபரிக்கப்படுகின்ற விடயங்கள் இன்றைய அரசியல் சூழலுக்கும் பொருந்தக் கூடியன. அதன் வெளிப்பாட்டுத்தன்மை மிக நுணுக்கமாகவும், தெளிவாகவும் விபரிக்கப்படுகின்றபோது அதன் இன்றைய காலத்துப் பொருந்துகையும் உணரப்படக் கூடும்.

நாடகம் அடிப்படையில் பாநாடகம்; அதுவும் யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழை அடிப்படையாகக் கொண்டது. எனவே அரங்காற்றுவோர் அதனது உச்சரிப்புச் செம்மை காலப் பிரமாணம் என்பவற்றைச் சரியாக நிகழ்த்தும் போதே நாடகம் உயிர் பெறும். பா நாடகத்துக்குரிய ஒத்திசைவு மிகவும் அவசியமானது. அது தனித்த பேச்சாகவும் அமையலாம் அல்லது உரையாடல்களாகவும் அமையலாம். பாவடிவம் அவ்வாறான ஒத்திசைவின் போதே பாநாடகம் என்ற வடிவைப் பெறும். அதுபோலவே பேச்சுத்தமிழ் பிரயோகம். பேச்சுத்தமிழ் என்பது கொச்சைப் பேச்சல்ல என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். அரங்க ஆற்றுகையின் வெற்றி வெறுமனே வேடப் பொருத்தம், காட்சி அமைப்பு என்பவற்றில் மட்டுமல்ல. அது உயிர் பெறுவது அதன் ஓட்டத்திலும் தான் என்பதை ஆற்றுவோர் அவதானிக்க வேண்டும். திருத்தமான மனப்பாடமும் உச்சரிப்புத் தெளிவும், நிதானமான ஆற்றுகையும் நாடகத்தின் தரத்தை மேலும் உயர்த்த வல்லன.



சோக்கல்லோ சண்முகம், கோமதிருந்தினி பிரணவேந்திரன், ஜெயஜோதி.

நாடகத்துக்கான அரங்க அமைப்பு கச்சிதமாக அமைந்திருந்தது. வீடும் திண்ணையும், வேலியும், துலாவும், வாழைமரமும் - மூக்குப்பேணி, வெற்றிலைத் தட்டம், உருவப்பானை என்பன கவனமாக இணைக்கப்பட்டிருந்தன. பிரதான நடிகையின் பிற்கொய்யகம் வைத்த பதினாறு முழச் சேலைக்கட்டு என்பவற்றில் கவனங்கொண்டவர்கள் அய்யரை அதுவும் வறுமைப்பட்ட ஐயரை தலைப்பாகையுடன் உலவவிட்டது மிகை. பெண்பாத்திரங்கள் ஏற்ற இரு நடிகைகளும், கணேச பாத்திரமேற்ற சிறுவனும் தமது பங்களிப்பைச் சரிவரச் செய்ய முயன்றுள்ளனர். அம் மூவருக்கும் ஒரு சபாஷ் போடலாம். ஏனையோரும் இன்னும் ஒத்திசைகின்ற போது நாடகம் இன்னமும் மிடுக்குப் பெறும். சோக்கல்லோ சண்முகத்தார்தான் நாடகத்தின் பிரதான இயங்கு தளம். எனவே, சோர்ந்து போகாது கம்பீரமான மாணிக்க நயனகாரராக அவர் தம்மை நிலை நிறுத்தும் போதுதான் கதையோட்டம் பலம் பெறும். காசியாகவும், சோமுவாகவும் நடித்த இளைஞர்கள் உரையாடலிலும், நடிப்பிலும் இன்னுங்கவனங் கொள்வது அவசியம். பொலிசாக நடித்தவருக்கான உச்சரிப்பும், பாடமும், ஆற்றுகையும் நிதானப்பட வேண்டும். வார்த்தைகள் வாசகருக்கு சென்று சேராது விடின் ஆட்டத்தால் பயன் ஏது? விதானையாருக்கு மிடுக்கு அவசியம்; அது உடையார் மிடுக்காக இருக்க வேண்டும். பஞ்சையர் நாடகத்தின் இன்னோர் இயக்கு விசை. அவரது நிதானம் சரி. ஆயின் வார்த்தைகள் சரியான இடத்தில் வர மறுக்கின்றன. வாக்கினிலே தெளிவு வேண்டும்.



உருக்மணிகாந்தன், சிவாசுப்பிரமணியம்
சோக்கல்லோ சண்முகம்



லோறன்ஸ், கேமபிருந்தினி
பிரணவேந்திரன், மடுளுகிரிய விஜேரட்ண

நாடகத்தின் இன்னோர் அம்சம் அதற்கான இசை. நாடகம் மிகக் கம்பீரமாக தவில் முழங்க ஆரம்பித்து நயனம் ஊதித் தணிகின்றது. நல்ல ஆரம்பம்; ஆயின்



நாடகம் முழுவதும் ஒரு மெல்லிய இசைச்சேர்வை சேர்த்திருந்தால் நாடகத்தின் கதைப் போக்கை இசையூடாகவும் நடத்திச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். நாடகத்தின் ஆரம்பமும் முடிவும் இசைப்பாடலுடனேயே தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. மஹாகவியே அப்பாடல்களுக்கான இராகங்களையும் குறிப்பிட்டுள்ளார். ஆயின் அந்தப் பாடல்கள் இசைக்கப்பட்டபோது அது நாடகத்துக்கான ஆரம்ப இசையாகவோ முடிவிசையாகவோ நினைக்க முடியவில்லை. மிகவும் அவசியமாக அந்த இசைமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பூபாளமும், மோகனமும் பொங்கிப் பிரவாகிக்க வேண்டும். அப்போதுதான் மஹாகவி என்ற உருத்திரமூர்த்தி உயிர் பெறுவார்.



பாஸ்க்கரா
ஜெயஜோதி

இறுதியாக இந்த நாடகத்துக்கான முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. முதலில் இந்த நாடகத்தைத் தேர்வு செய்தமையே பாராட்டத்தக்க விடயம். அடுத்து இவ்வளவு நடிகர்களையும் ஒன்றிணைத்தது. மூன்றாவது இன்றைய அவசர உலகில் அதனைப் பிரமாண்டமாக மேடையேற்றியது. எனவே சோக்கல்லோ பாராட்டுக்குரியவர். அவரது முயற்சிக்கு அவரது சகாக்கள் கொடுக்கும் ஆதரவில்தான் இந்த நாடகத்தின் அடுத்த அரங்காற்றுகைகள் கச்சிதமும் உயிர்ப்பும் பெறும். ■



சோக்கல்லோசண்முகம்
ஜெயஜோதி

..... 51ம் பக்கத் தொடர்ச்சி

நீலாவணன் தமது பிள்ளைகளான எம்மைப்பற்றி அவ்வப்போது எழுதிய கவிதைகள் சில.

என்னை மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய விடுதியில் சேர்த்துவிட்டு, வீடுசென்ற அன்றிரவு அவர் எழுதிய கவிதை இது. அரின் மரணத்தின் பின்பே இக்கவிதையை நான் கண்டேன்.

## விடுதியில் வேந்தன்...

காந்தம் இழுத்திடும் என்பார்கள் பெற்றோர் தம் பிள்ளையின்மேல்
பாந்தம் இருக்குமென் பேன்நான் கவிஞன்! அறிஞரவர்!
வேந்தன் உனை நான் விடுதியில் விட்டு நம் வீடுவரச்
சாய்ந்து பொழுது மலையுள் சரிந்து சயனித்தது.

வீட்டில் விளக்கு இலை. இருள்! ஏதோ விழுங்கியவள்
ஆட்டம் இருந்தாள் உன் அம்மா. முதுசொமாம் ஆதனத்தைக்
கோட்டை கொடுத்தவள் போல் கூரை மேட்டைக் குறிப்புவைத்து
தேட்டம் நடத்துகின் றாளோ! தெரியேன்! திருகிவிட்டேன்.

பாட்டுக்கெழுந்து நடந்து விளக்கினைப் பற்றவைத்தாள்
கேட்டாள் உன் சங்கதி யாவும் குடைந்தவை கூறுகையில்
பாட்டுச் சுரந்தவள் கண்களில் பாய்ந்து பரவும். அதைக்
காட்டாமல் மெல்ல நடந்து தன் காரியம் கைப்பிடித்தாள்.

வீணையின் தந்திகள் கால்பட்டு விண்ணென் றறுந்திடவும்
வீணை அழுத குரல்கள் என் காதில் விழுந்தன; போய்
பானை அடுக்கை உருட்டி விழியை முந்தானையினால்
நானறியாது துடைத்தனள் உன் வீரத் தாய்! நகையே

என்தம்பி வினோதன் வாய்பேச முடியாதவன். ஒருநாள் வாசலில் விளையாடிக் கொண்டிருந்தவனின் பந்து களவு போன விதத்தை அவர் இவ்வாறு கவிதையில் வடித்திருக்கிறார்.

## தாய்

பேசத் தெரியாத, என் பிள்ளை, நெடுநாளாய்
ஆசையோடு வைத்துவிளையாடும் அழகான
பந்தோ டிருந்தான் படலைக்குள், யாரோ பெண்
குந்தியிருந்தாள் குழந்தை அருகினிலே,
ஆஸ்பத் திரியிருந்து வந்திருந்தாள் அம்மாது
பேசத் தெரியாத பிள்ளையெனக் கண்டறிந்தாள்
ஆசையொடு தன்கழுத்தைக் கட்டி "அம்மா பந்து" என்று
பேசும்பொற் சித்திரத்தைப் பெற்றமனம் எண்ணியது
பந்தொன்று வாங்கப் பணமில்லை ஆதலினால்
சந்தர்ப்பம் தன்னைச் சரியாய்ப் பயன்படுத்திக்
கொண்டாள், அவளுடைய கொங்கைகள் மூன்றாயின!
கண்ட ஒருவர் கதைசொல்லும் முன்பே அத்
தாய்மை நடந்து தலைமறைந்து போயிற்று!
வாய்பேசா என்மைந்தன், தாயோ டிவைசொன்னான்
கண்களில் நீர் சோரக் கை காட்டி அழுகின்றான்
கண்துடைத்தேன், பிள்ளைக்கு
"கள்ளி" என்றாள் என்துணைவி

என் தங்கை படிப்பில் அவ்வளவு கெட்டிக்காரியில்லை என்பது அவளது ஆசிரியையின் கருத்து. ஆனால் அவள் கெட்டிக்காரிதான். ஏதோ இப்போது கொஞ்சம் படிப்பில் கவனம் குறைவு என்கிறார். அவள் புத்திசாலி என்பதை அவர் நிறுவும் விதம் இதுதான்.

## விவேகி

துக்கமும் துயரும் பொங்கும்
துவிகுரல் சினிமாப் பாட்டு
பக்கத்து வீட்டுப் பையன்
பலமாகப் பாடல் கேட்டேன்
பக்கத்தில் இருந்து பாடம்
படித்தவள் நளினி வாவா
பக்கென நூலை மூடிப்
பார்த்தனள் சுற்றும் முற்றும்

பாட்டிலே சொக்கிப் போய் தன்
படிப்பையும் துறந்தாள் என்று
காட்டினர் வீட்டிலுள்ளோர்!
கணத்திலே, துடைப்பம் தூக்கி
மூட்டைபோல், கிடந்த நாயின்
முதுகிலே போட்டாள் ஒன்று
வீட்டினைச் சுற்றி நாயும்
வீல் என்று கத்த மீண்டாள்!

ஆதலால்.... நளினி பற்றி
அழகம்மா ரீச்சர், நீங்கள்
வேதனைப் படுதல் வேண்டாம்!
விவேகிஎன் நளினி, ஏதோ
சாதனைக் குறைவு: நாளை
சரிப்பட்டு விடுவாள்... ஆண்டுச்
சோதனைக் கெல்லாம் நன்றாய்

விடை செய்வாள்! கவலை வேண்டாம்!

என் கடைசித் தங்கை கோசலாவின் கையில் அவளது பொம்மை படும்பாட்டை பாட்டாய் அவர்வடித்த பாங்கு இது.

## விதியும் நானும்

நீல மணிக்கண்கள் நீண்ட கரியமுடி
கோல நிலா கட்டிக் கொஞ்ச துடிக்கும் நகை
இளமை ஒழுகும் எழிலோ வியமாய்
அழகாய் கலைஞன் அமைத்தெடுத்தான் ஓர் பாவை!

எம் வீட் டிள வரசி கோசலை என்பவள்
என்னென்ன பாடு இதனைப் படுத்துகிறாள்
தண்ணீரில் போட்டு வைப்பாள் தலையூறி விட்டதென்று
துண்டு கொண்டு வந்து துடைத்தாள் பவுடர்
கொண்டு வந்து மேனியெங்கும் கொட்டித் தடவிவிட்டு
பாவாடை சட்டை முத்து மாலை றிபன் கட்டி
பாவை தன் மார்பினிலே பாலூட்டித் தாலாட்டும் பாடுகிறாள்.

காலில் தலையணையைப் போட்டு வளர்த்தி
தூங்க வைத்து விட்டு துணி கழுவப் போகிறாள்
தேங்காய் துருவினாள் காய்கறிகள் வெட்டி
கறிகளோடு சோறு சமைத்தாள் அவைபின்
பிரியமாய் பிள்ளையினை தூக்கி வைத்து ஊட்டுகிறாள்
திடீரென்று கோபத்தில் திட்டுகிறாள் பிள்ளையை
படீரென்று நாலுமுதுகில் படைத்துவிட்டு
பள்ளிக்கு போய்படிக்க சொன்னாள் நீ போகாமல்
துள்ளி விளையாடப் பார்க்கிறாள் எண்ணி என்று
ஈர்க்கிலெடுத்து இரண்டு கொடுத்தாள் காலில்
பார்க்க பரிதாப மாக இருக்கிறது.

இப்படி பாவை தினமும் பலதடவை
அப்பாவி... கையில் படும்பாடு கொஞ்சமல்ல
எப்பொழுதும் என்மகள் விளையாடக் கூப்பிட்டால்
தப்பாது பாவையவள் கையில் தடகொடுக்கும்
விதி என்னை விளையாடக் கூப்பிட்ட வேளைகளில்
அதை ஏற்றதன் பின்னே போனதுபோல் பாவையும்
என்மகள் கையில் இருந்து வருகிறது.



# தமிழ் நாடகத் தந்தை
# தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை தமிழில் நடத்தப்பட்ட நாடகங்கள் முழுவதும் முழுக்க முழுக்கப் பாடல்களையே கொண்டுள்ளதாக இருந்தன. நாடகம் நடத்தப்படுவதில் ஒரு ஒழுங்கு முறை, நியதி இருந்ததில்லை. நாடகங்கள் தெரு முனைகளில் நடக்கும். இரவு முழுவதும் நடக்கும். நடிகர்களும் பாத்திரங்களின் தன்மைபற்றி கவலைப்படாமல் தங்களின் தன்மை, திறமை, விருப்பம் போல் பாடலும் வசனமும் பேசுவார்கள். இடையிடையே ரசிகர்களின் விருப்பத்திற்கேற்பப் பாடிய பாடலையே நடிகர்கள் திரும்பவும் பாடுவார்கள். இவ்வாறு ஒரு இலக்கணத்திற்கு உட்படாமல் இஸ்டம் போல் வெறும் பொழுது போக்கிற்கு மட்டும் கையாளப்பட்ட நாடகக் கலைக்கு ஒரு இலக்கணம் வகுத்து, வடிவம் அமைத்து, சீரான காட்சி அமைப்புகள், உரையாடல்கள், போன்ற மேடை நாடகமாகப் பரிமளிக்கப் செய்தவர் திரு.சங்கரதாஸ் சுவாமிகள். அதனாலேயே அவர் தமிழ் நாடகத் தந்தை என்றும் தமிழ் நாடக தலைமை ஆசிரியர் என்றும் போற்றப்படுகிறார். அக்காலத்தில் நடைபெற்று வந்த எல்லா நாடக சபைகளிலும் சங்கரதாஸ் சுவாமிகள் ஆசிரியராக இருந்து வந்தார். இறக்கும் வரை பிரமச்சாரியாகவே வாழ்ந்தார்.

1918 ஆம் ஆண்டு அவரே தத்துவ மீலோசனி வித்துவ பால சபா என்ற நாடகக் குழுவைத் தோற்றுவித்தார். மேலும் இரணியன், இராவணன், எமன். சனீஸ்வரபகவான் போன்ற பாத்திரங்களை ஏற்று நாடக மேடைகளில் தன் நடிப்பாற்றலையும் வெளிப்படுத்தினார். தமிழை முறையாகக் கற்றுப் புலமை பெற்ற இவர் ஒரே இரவில் "வீர அபிமன்யு" என்னும் நாடகத்தை நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களை உரையாடல்களை ஒரு அடித்தல் திருத்தல் இன்றி எழுதி முடித்ததை அந்த நாடகத்தில் அபிமன்யுவாக நடித்த மறைந்த ஔவை தி.க.சண்முகம் அவர்கள் சுவாமிகளின் நாடகப் புலமைத் திறத்தை வியந்து பாராட்டுவார். இன்றைய தமிழ் நாடக மேடை வடிவத்துக்கு அடித்தளம் அமைத்துத் தந்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். வள்ளி திருமணம், கோவலன், சத்தியவான் - சாவித்திரி, அபிமன்யுசுந்தரி, சதி அனுசூயா,அல்லி அர்ஜுனா, பவளக்கொடி, பக்தபிரகலாதா, லவகுசா, ரோமியோவும் ஜுலியட்டும், சிம்பலைன் (ஷேக்ஸ்பியர்) போன்றவை சுவாமிகள் எழுதிய பிரபலமான நாடகங்களாகும்.

1867-ம் ஆண்டு ஆவணித் திங்கள் 22ம் நாள் பிறந்த அவர் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்து 13-11-1922ல காலமானார். தமிழக முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் சுவாமிகளின் திருவுருவச் சிலையை மதுரையில் திறந்து வைத்திருக்கிறார். தென்னிந்திய நடிகர் சங்கக் கட்டிட வளாகத்திற்குள் "சங்கரதாஸ் கலையரங்கம் என்ற பெயரில் நாடக அரங்கு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நன்றி: தமிழ்நாடகத்தந்தை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் 140வது பிறந்தநாள் சிறப்புவிழாமலர்.
சங்கரதஸ் சுவாமிகள் நினைவுமன்றம், சீதாலட்சுமி நிலையம்
300/1, அவ்வை சண்முகம் சாலை
சென்னை - 86.

"மச்சான் மாசிலான், பொங்கல் பாடுகளெல்லாம் எப்படி!". இந்த வருசமாவது நிம்மதியாக நாம பொங்கிறல்லயா! சுனாமியில அடிபட்டு, கலவரத்தில இடம்மாறிப் போய் வாயால சொல்லேலாத துயரமெல்லாம் அனுபவிச்சி ஒரு பாடாக ஊருக்கு வந்து சேர்ந்திருக்கம்: ஒரு காக்கொத்து அரிசியாவது பொங்கிப் படைக்கத்தானே வேணும்.

மச்சான் மாசிலான், தை புறந்தா வழிபுறக்குமெண்டுதான் சொல்லுவாங்க. ஆனா நம்மப் போல ஏழை எளியதிர வாழ்வில இண்டு வரைக்கும் ஒரு மண்ணாங்கட்டியையும் காணல்லயேடா!

# விளாசல் வீரக்குட்டி

வெள்ளாமை செய்யிறவனும் பொங்கிறான், மீன் பிடிக்கிறவனும் பொங்கிறான். ஊருக்கு நன்ம செய்தவனும் பொங்கிறான். ஊர ஏமாத்திறவனும் பொங்கிறான். உத்தியோகத்தனும் பொங்கிறான். உழைச்சி ஓடாப்போனவனும் பொங்கிறான். ஏதோ எல்லாரும் பொங்கக்குள்ள சும்மா பார்த்திட்டு இருக்கலாமா எண்டுத்து ஒண்டுக்கும் வழியில்லாம அகதியா போய் வெறுங்கையோட ஊருக்குத்திரும்பி வந்திருக்கிற நாமளும்தான் பொங்கிறம். புதுவருசம் புறந்தா ஏதோ பொன்னள்ளிக் கொட்டப்போகுதெண்ட நம்பிக்கையில நாம எல்லாரும் தான்வருசாவருசம் கையில இருக்கிறத வச்சுப் பொங்கிறம். நம்பிக்கதானே மச்சான் வாழ்க்க. நம்பிக்கெட்ட நமக்கு எல்லாமே பழகிப்போச்சி. சரி மச்சான் மினக்கிடாம பொயித்து வா. உனக்கும் கன வேல கிடக்கும்"




-மிதுனன்



# புதையல்

## சுவாமி விபுலானந்தர் வழங்கிய சான்றிதழ்

முன்னாள் கல்குடாத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் ...யான். மாணிக்கவாசகம் அவர்களின் சகோதரர் அமரர் திருஞானசம்பந்த மூர்த்தி அவர்களுக்குச் சுவாமி விபுலானந்தர் அவர்கள் ஆங்கிலத்தில் வழங்கிய சான்றிதழ். சுவாமி அவர்களின் ஆங்கிலக் கையெழுத்தைக் காட்டும் ஆவணங்களில் ஒன்று.


The Ramakrishna Mission
4th Lane
Wellawatte, Colombo
9th March 1939

Mr Ponniah Tirugnana-Sambanda murty was a student of the Shivananda Vidyalaya, Kalladi-Uppodai, from where he passed the Senior School Cert. Exam. of Aug 1938.
His father Mr K. Ponniah, Chief Headman of Eravur, Koralaipattu, Batticaloa was well-known to me.
During his school career Tirugnanam conducted himself to the fullest satisfaction of his teachers

(17)

and superiors by his good manners and careful application to studies.
I wish him success in life and have great pleasure in testifying to his good moral character.

Swami Vipulananda

...றி: திருமதி. தயாவெஸ்ட்
(இங்கிலாந்து)

## அயலகத்தமிழ் இலக்கியம்

அன்புள்ளங் கொண்டவர்களே,
வணக்கம்

2007, டிசம்பர் முதல்வாரம் - தமிழகத்தில் திருச்சியில் தூய வளனார் கல்லூரியில் நடைபெற்ற "அயலகத்தமிழர் வாழ்வும் இலக்கியமும்" என்ற பன்னாட்டு கருத்தரங்கில் நானும் - நண்பர் ரா.நித்தியானந்தனும் - கலந்து கொண்டோம். அதன் பின்னர் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் சி.சுப்பிரமணியம் அவர்களின் அழைப்பின் பேரில் அயல்நாடுகளில் இருந்து வந்த அனைவரும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு சென்றிருந்தோம்.

அங்கு நடைபெற்ற இலக்கிய சந்திப்பின் போது துணைவேந்தரிடம் அயலகத்தில் வாழும் தமிழ் எழுத்தாளர்களின் நூல்களை சேகரித்து வைக்கும் படியும் அதுபற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டேன்.

அப்பொழுது பதிலளித்த துணைவேந்தர் - தமிழ்ப்பல்கலைக்கழக நூலகத்தில் அயலகத்தமிழ் இலக்கியப் பிரிவு ஒன்றை அமைப்பதாக வாக்குறுதி அளித்ததுடன் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தமிழ் இலக்கிய நூல்களை ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்வதாகவும் உறுதி மொழி அளித்ததுடன் அங்கு இயங்கி வரும் வெளிநாட்டவரின் தமிழ் மொழிப்பிரிவை, தமிழ் இலக்கிய பிரிவாக மாற்றியமைப்பதாகவும் அப்பிரிவிற்கு பொறுப்பான தலைவர் முனைவர் கார்த்திகேயன் அவர்களிடம் எங்கள் முன்னிலையிலே அறிவித்தார். அத்துடன் வெளிநாடுகளில் வாழும் எழுத்தாளர்கள் தங்களின் நூல்களை அனுப்பி வைத்தால்தான் அயலக தமிழ் இலக்கியத்தை ஆய்வு செய்ய முடியும் என்றார்.

அயல் நாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள் முனைவர் கார்த்திகேயன் அவர்களுக்கு தங்கள் நூல்களின் இரண்டு பிரதிகளை அனுப்பிவைக்க வேண்டும். அவர் அதனை தமிழ் பல்கலைக்கழக நூலகரிடம் ஒப்படைப்பார்.

நூல்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr. A. Karthikeyan
Prof & Head
Dept of Tamil Studies in Foreign Countries
Tamil University
Tanjauvr 613010
South India

நூல்களை அனுப்பிவைக்கும் எழுத்தாளர்கள் அதுபற்றிய விபரங்களை தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

த. பெ. இல. 32,
கண்டி,
ஸ்ரீ லங்கா.

இவ்வண்ணம்
தோழமையுடன்
**அந்தனி ஜீவா**



## குறுக்கெழுத்துப் போட்டி - 1

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி:**

ஆசிரியர், 'செங்கதிர்'
குறுக்கெழுத்துப்போட்டி-1.
19, மேல்மாடி வீதி,
மட்டக்களப்பு.

1 வது பரிசு ரூ 500/=
2 வது பரிசு ரூ 300/=
3 வது பரிசு ரூ 200/=

விடை அனுப்பவேண்டிய இறுதித்திகதி: 28.02.2008.

குறுக்கெழுத்துப் போட்டி - 1

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 3 | 4 | | 6 | 7 |
| | | 10 | | | | |
| 15 | | 17 | | | | 21 |
| 22 | | 25 | | | | 28 |
| | | 31 | | | 34 | |
| 36 | | 38 | | 40 | | |
| 43 | | | 46 | | | |

பெயர் :..........................................

முகவரி:..........................................

..........................................

கையொப்பம்:.............................. திகதி:..............

இங்குள்ள படிவத்தில் மட்டுமே விடைகள் அளிக்கப்படல் வேண்டும்.

### இடமிருந்து வலம்

01.ஈழத்தில் வெளிவந்த இலக்கியச் சிற்றிதழ்.
03.செங்கதிர் சிதறிக்கிடக்கிறது.
10.இது மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
15.விதியை இதனால் வெல்லலாம்.
17.குழந்தை
22.இதற்கு அமுதென்று பேர்.
25.இது அழுது பால் குடிக்கும்
31.ஆயுதங்களில் ஒன்று.
34.முள் குத்தினால் இது ஏற்படும்.
36.நால்வகை நிலங்களிலொன்று மாறிக்கிடக்கிறது.
40.சண்டையில் ஒருவகை.
43.தற்போது வெளிவரும் பெண்களுக்கான சஞ்சிகை.
46.இதன் மூலமும் பேசமுடியும்.

### மேலிருந்து கீழ்

01.இவனுடைய லீலைகளை வென்றார் இல்லை.
04.தமிழர் வரலாற்றில் இவர்களது காலம் இருண்ட காலம்.
06.ஐம்பெருங்காப்பியங்களிலொன்று தலைகீழாய்க் கிடக்கிறது.
07.வளர்ப்புத் தாய்.
17.குடியிருக்காத வீடு இது படும்.
21.பூவொன்றின் ஆங்கிலப் பெயர்.
28.பூவொன்று குழம்பிக்கிடக்கின்றது.
34.முருகனின் மனைவி.
36.கடலில் தோன்றும் இது புரண்டு கிடக்கிறது.
38.இது குத்தினால் வலி ஏற்படும்.
40.போரில் வெற்றிபெற்றோர் இதனைச் சூடுவர்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

அடுத்த இதழிலிருந்து.... நூலகம்




வாசகர்களின் வினாக்களுக்கு இப்பகுதியில் விடை அளிக்கப்படும். கலை, இலக்கியம் சார்ந்த வினாக்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி: ஆசிரியர், 'செங்கதிர்' இங்கே விடை. எங்கே வினா? 19, மேல்மாடிவீதி, மட்டக்களப்பு.




'செங்கதிர்' பற்றிய வாசகர்களின் கருத்துக்கள், விமர்சனங்கள், வளர்ச்சிக்கான ஆலோசனைகள் இப்பகுதியில் இடம் பெறும். வாசகர் கடிதங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி : ஆசிரியர், 'செங்கதிர்', வானவில், 19, மேல்மாடிவீதி, மட்டக்களப்பு.

பக்க வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு:
V'MAN'S GRAPHICS
☎: 060-2150064, 0777 -313 959



NHK HARDWARE

Genral Hardware Merchents, Electricals Itemes,
Dealers in All Types of Steel Tors,
wairenaills, Plywood
Sheet, Paints, Asbesto Sheets and Cement

67, Main Street,
Kattankudy - 6.
T.P: 065 2247550
060 2657075
Fax: 065 2247550

Office:
23,A J A Road Kattankudy - 6
T.P: 060 2653830
Mob: 077 6155152
Res: 065 2246128



MODERN HARDWARE

General Hardware merchants,
Building materials, Aluminum Fittings,
Window glasses, Paints, Flay woods,
MDF Boards, Power tools and
Hot water heater
35,20F, Central Road, Batticaloa
Tel: 065 2226781, 077 3490342,
077 691 5566



சங்கீதா ஜுவல்ஸ்
සංගීතා ජුවල්ස්
Dealers in 22kt Gold Jewellery
335 C, Galle Road, Wellawatte.
Colombo - 6.
Tel: 2500682 - 2361321
V'MAN'S GRAPHICS : 060-2150064, 0777-313 959